பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 23 செவ்வாய்க்கிழமை (08.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 253

# இலங்கை அரசின் உதாசீனப் போக்கை சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்!

## மாவிலாறு விவகாரத்தின் பின்னணி நிலையை பகிரங்கப்படுத்தி விடுதலைப் புலிகள் அறிக்கை

கிளிநொச்சி, ஓகஸ்ட் 08

**"அமைதி வழியில் விடயங்களை அணுகி - சமாதானம் மூலம் இணக்கங்களை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு கொண்டிருக்கின்ற உதாசீனப் போக்கை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.**

**"மாவிலாறு விவகாரத்தில் அரசின் இந்த அமைதி வழி உதாசீனப் போக்கு மிகவும் தெட்டத் தெளிவாக வெளிப்பட்டிருப்பதை உலகம் நன்கு உணர வேண்டும்."**

**- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை சர்வதேச சமூகத்திடம் முன்வைத்திருக்கின்றனர்.**

இது தொடர்பாக புலிகளின் சமாதானச் செயலகம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நோர்வே சிறப்பு சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் மற்றும் ஸ்ரீலங்காவுக்கான நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோருடனான ஓகஸ்ட் 6 ஆம் நாள் சந்திப்பின்போது எதுவித நிபந்தனையுமின்றி மாவிலாறு அணையைத் திறக்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் இணங்கியிருப்பது தெரிவிக்கப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சிறுப்பிட்டியில் நேற்றிரவு இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், ஓக.8

சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் நேற்றிரவு 8 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச்சேர்ந்த எஸ். தர்மதீசன் (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் - உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்புகையில் இவர் சுடப்பட்டார் என்றும் - கூறப்பட்டது. (ம-1)

### சூட்டுச் சம்பவத்தில் காணாமற்போன இளைஞர் நேற்றுச் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக 8

ஊர்காவற்றுறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டின்போது காணாமற்போன இளைஞன் நேற்றுக் காலை சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுப்

.(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறு நோக்கி படைநகர்வு மூதூர் கிழக்கு மீது ஷெல் வீச்சு!

கொழும்பு, ஓக.8

மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியை நோக்கி நேற்று திங்கட்கிழமை காலை படைநகர்வு ஆரம்பிக்கப்பட்டதாகக் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அப்பகுதியில் கடும் ஷெல் வீச்சுக்களை மேற்கொண்ட பின்னர் படையினர் நகர்வு முயற்சிகளில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவிலாறு நீர் அணைப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் இணங்கிய பின்னரும் அந்த இணக்கத்தைப் புறந்தள்ளி விட்டு அரசுப் படைகள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன என்று விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

திருகோணமலையில் உள்ள படைத் தளங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## அணை திறப்பது குறித்து ஆராய்வதற்காக நோர்வே தூதுவர்கள் திருமலை விஜயம்!

திருகோணமலை, ஓக. 08

நோர்வேயின் விசேட தூதர் ஜோன் ஹன்ஸன் போவர், இலங்கைக்கான தூதர் ஹான்ஸன் பிரட்ஸ்கர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் ஆகியோர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

நோர்வேத் தூதர்கள் நேற்று முற்பகல் 10.30 மணிக்கும் கண்காணிப்புக் குழுத் தலைவர் பிற்பகல் 1.30 மணிக்கும் திருகோணமலையைச் சென்றடைந்தனர்.

சர்ச்சைக்குரிய மாவிலாற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறில் படையினரின் நேற்றைய நகர்வு முறியடிக்கப்பட்டதாகப் புலிகள் அறிவிப்பு

திருகோணமலை, ஓக.8

திருகோணமலையில் மாவிலாறு நோக்கி நேற்றுப் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை தாங்கள் முறியடித்துவிட்டனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

பல்குழல் ஏவுகணைகள், ஆட்லறி மோட்டார்கள் என்பவற்றை சரமாரியாக ஏவிக்கொண்டு நேற்றுக்காலை படையினர் பெருமெடுப்பிலான இராணுவ நகர்வு ஒன்றை ஆரம்பித்தனர். அப்போது விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகள் மீது விமானப்படையின் விமானங்கள் அகோர குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

கிபிர் விமானங்கள் நேற்று நடத்திய குண்டுவீச்சில் ஈச்சிலம்பற்று பிரதேச மக்களின் சம்பூருக்கான போக்குவரத்துப் பாதையின் பாலம் முற்றாக அழிந்தது. அந்தப் பாலத்தை அண்மித்த குடியிருப்புகள் மீதும் குண்டுகள் வீழ்ந்ததால் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. பொது மக்களின் வீடுகள் நோக்கி பல்குழல் எறிகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

- இவ்வாறு கனரக ஆயுதங்கள் சகிதம் முன்னேறி வந்த படையினரை விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்தி விட்டனர் என்று புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு. குறிஞ்சிநகரில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

ஏறாவூர், ஓக.8

கல்குடா, விநாயகர்புரம் - குறிஞ்சி நகர் கிராமத்தில் வைத்து நேற்று அதிகாலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை கமலநாதன் (வயது-22) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார் என்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் வீட்டைத் தட்டி இவரை எழுப்பி அழைத்துச் சென்று நூறு மீற்றர் தூரத்துக்கு அப்பால்

(16ஆம் பக்கம் பார்க்க)

சமாதானம் வேண்டி யாழ். நகரில்

## ஊனமுற்றோர் சங்க ஏற்பாட்டில் சர்வமதப் பிரார்த்தனை, பேரணி




யாழ்ப்பாணம், ஓக.8

நாட்டில் போர் ஏற்படுவதைத் தடுக்கும் வகையிலும் - எதிர்காலச் சந்ததியினர் ஊனமுற்றவர்களாக மாறுவதை இல்லாமல் செய்யும் நோக்கத்துடனும் - யாழ். மாவட்டத்திலுள்ள ஊனமுற்றோர் இணைந்து நடத்திய சர்வமதப் பிரார்த்தனையும் சமாதானப் பேரணியும் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றன.

முற்பகல் 11 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வு ஆரம்பமாகியது. யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முதலில் சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது.

ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி திகன பகுதியில் நேற்று விடிகாலை நிகழ்ந்த கிளைமோர் வெடிப்பில் பொலிஸ் அதிகாரி பலி!

### ஜீப் சிக்கியது; சாரதியும் மரணம்! சம்பவ இடத்தில் தேடுதல்!!

கண்டி, ஓக.8

களுத்துறை கட்டுக்குருந்தவில் இயங்கும் பொலிஸ் விசேட அதிரடிப்படைப் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனிவிரத்ன, கண்டியில் நேற்று விடிகாலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் சிக்கி உயிரிழந்தார். அவரது வாகனச் சாரதியும் இந்தச் சம்பவத்தில் மரணமானார்.

கண்டி, திகன - ரஜவெல தமிழ் மகா வித்தியாலயம் முன்பாக நேற்று விடிகாலை 4.45 மணியளவில் இந்தக் கிளைமோர் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பயணம் செய்த ஜீப் வண்டியை இலக்கு வைத்தே சக்தி வாய்ந்த கிளைமோர் கண்ணி வெடிக்க வைக்கப்பட்டிருக்கிறது. இதனால், ஜீப் பலத்த சேதமடைந்தது. படுகாயமடைந்த உபுல் செனிவிரத்ன, கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் அங்கு உயிரிழந்தார். படுகாயங்களுக்குள்

(16ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ் கல்லூரி முன் அமைந்துள்ள காவலரணை அகற்றக்கோரி மாணவர் போர்

யாழ்ப்பாணம்,ஓக.8

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள இராணுவ காவலரணை அகற்றுமாறு



கோரியே மாணவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்பட்டது.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் கல்லூரிக்குச் சமூகமளித்திருந்த மாணவர்கள் கல்லூரியின் பிரதான நுழைவாயிலை இழுத்து மூடிவிட்டு அங்கு நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், கல்லூரியின் பிரதான வீதியினை மறித்து ரயர்களை எரித்த மாணவர்கள் சுமார் ஒரு மணிநேரம் வீதிமறியலிலும் குதித்தனர். தொடர்ந்து 8.30 மணியளவில் மாணவர்கள் கல்லூரியை விட்டுக் கலைந்து சென்றனர். இதனால், பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்தன.

மாணவர்களால் இழுத்து மூடப்பட்டிருந்த பிரதான நுழைவாயில் கதவினில் பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதில் குறிப்பிடப்பட்டிருந்த வாசகங்கள் சில வருமாறு:-

✱ சரத் பொன்சேகாவே உனது 40 ஆயிரம் படைகளுக்கும் மாணவர்கள் நினைத்தால் இங்கு பாடைகட்டுவார்கள்.

✱ கிருஷாந்தியைக் கொலை செய்தாய்... சஞ்சீவனை கொலை செய்தாய்... நீ சாதிக்க நினைத்ததை செங்களத்தில் முறியடிப்போம்.

✱ குடாநாட்டுப் பள்ளிமாணவர்களைச் சுதந்திரமாகக் கற்கவிடு!

✱ மாணவர் சக்தி பெரும் சக்தி அதைத் தீண்ட நினைக்காதே!

இதேவேளை - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளில் ஒரு தொகுதியினரும் நேற்றையதினம் கல்லூரிக்குச் சமூகமளிக்கவில்லை - என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கல்லூரி மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

"ஆயுதங்களின் அச்சுறுத்தலோடு இந்த அடிமைத்தனம் மிக்க கல்வியையே அரசு எமக்கு போதிக்கின்றது. இராணுவம் எம்மை கவசங்களாக உபயோகிக்கின்றது. எமது சகோதரர்களான சஞ்சீவன், கிருஷாந்தி போன்ற இராணுவத்தின் இனவெறிக்குப் பலியான மாணவர் வரிசையில் எம்மையும் சேர்க்கப் பார்க்கின்றது.

"நாம் சுதந்திரமான கல்வியை எதிர்பார்க்கின்றோம். ஆயுதங்கள் அற்ற சூழலில் கற்க ஆசைப்படுகின்றோம். எமது ஒட்டுமொத்த மாணவ சகோதரர்கள் எல்லோரும் இதே வெறியில், துடிப்பில் தான் உள்ளனர். இராணுவம் எமது வேட்கையை, எமது பிரச்சினையை விரைந்து, உணர்ந்து கொள்ள வேண்டும். அரசு தான் நீண்டகாலம் இழைத்து வருகின்ற அநீதிக்கு முடிவு கட்டுதல் வேண்டும்.

"எமது கல்லூரிக்கு, எமது சகோதரப் பாடசாலைக்கு அருகில் உள்ள இராணுவ காவலரண் அகற்றப்படல் வேண்டும், எமது கல்லூரிச் சூழலில் இராணுவம் நிற்றல் கூடாது என்ற கோரிக்கையோடு நாம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமது கோரிக்கையை இராணுவம் ஏற்றுக்கொண்டு எம்மை கற்க அனுமதிக்க வேண்டும். அரசு மிக விரைந்து எமது கோரிக்கையினை பரிசீலனையில் எடுக்கவேண்டும்" - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13-15-86)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோருக்கு இன்று முக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஓக.8

கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். ஆரியகுளம் வீதியில் உள்ள புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட ஆவணங்களுடன் வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

# யாழ். கல்வி வலயம் முன்பாக தொண்டர் ஆசிரியர் மறியல்

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி



தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் நேற்று யாழ். கல்வி வலயத்தின் செயற்பாடுகளை முடக்கி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடமைக்கெனச் சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களும் போராட்டக்காரர்களால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதனால் வலயக் கல்விப் பணிமனை மற்றும் மாவட்ட மேலதிக கல்வி அலுவலகம் என்பவற்றின் அனைத்துச் செயற்பாடுகளும் செயலிழந்தன.

காலை 8 மணியளவில் வலயக் கல்விப் பணிமனையின் நுழைவாயிலில் ஒன்று கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் பணிமனையின் நுழைவாயில் கதவினை இழுத்து மூடிவிட்டு அதன் முன்பாக அமர்ந்திருந்து நேற்று மாலைவரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குக் காலதாமதமின்றி நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக சாதகமான பதில் கிடைக்கும்வரை மறியல் போராட்டம் தொடரும் என்று தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நண்பகல் நேரம் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வியமைச்சில் இருந்து வேறு கடமையின் நிமிர்த்தம் யாழ்ப்பாணம் வருகை தந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.எஸ்.நற்குணம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் க.செல்வரட்ணம் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடினார்கள். எனினும் குறிப்பிடத்தக்க பயனெதுவும் கிடைக்கவில்லை.

மறியற் போராட்டத்தில் ஈடுபட்ட தொண்டர் ஆசிரியர்களில் ஒரு தொகுதியினர் தொடர்ந்தும் அலுவலக வாசலில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். (ம-13-86)

## நல்லூரில் அங்கப் பிரதிஷ்டை செய்வோருக்கு

# தோல் தடிப்பு நோய் பரவாமல் தடுக்க பாதணி அணிவதை முற்றாகத் தவிர்க்குக

## அடியார்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அங்கப் பிரதிஷ்டை செய்தவர்களில் சிலருக்கு தோல் தடிப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனைத் தவிர்ப்பதற்கு, அடியார்கள் அனைவரும் பாதணி அணிந்து வீதியில் நடமாடுவதைக் கைவிடுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நல்லூர் கந்தசுவாமிகோயில் வருடாந்த மகோற்சவத்தில் 10ஆம்நாள் இன்றாகும். இந்தப் 10 நாள்களிலும் சகல தரப்பு பொது மக்களும், அடியார்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்கு எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த இடைப்பட்ட நாள்களில் அங்கப் பிரதிஷ்டை செய்யும் சில அடியார்களின் உடலில் தோல் தடிப்பு போன்ற நோய் ஏற்பட்டிருப்பது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தமுறை நாகர்கோவில் புதிய மணல் பரவியபோதிலும் இவ்வாறு நிகழ்ந்துள்ளமை கவலைக்குரியதாகவுள்ளது. இதற்காக கடந்த இரண்டு நாள்களாக அங்கப்பிரதிஷ்டை செய்யும் இடங்களில் நீர்விசிறல் நடவடிக்கை தவிர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மண்ணில் இருக்கக்கூடிய கிருமிகள் சூரிய வெப்பத்தில் அழிந்துவிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான இடங்களில் பாதணிகளோடு நடக்கும்பொழுது அவையூடாகவும் கிருமிகள் காவப்படலாம் என்ற சுகாதார அடிப்படை எண்ணத்திலேயே பாதணிகளை ஆலய வீதிகளில் முழுமையாகத் தவிர்க்குமாறு நாம் வேண்டிக்கொண்டோம். அதற்கு கணிசமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருப்பதையும் குறிப்பாக இளைஞர் சமுதாயம் எமது கோரிக்கைகளுக்கிணங்க செயற்பட்டதையும் நன்றியோடு குறிப்பிடும் அதே வேளை, நான் முன்குறிப்பிட்ட நோய் காணப்படுவதைக் கவனத்தில் எடுத்து ஆலய வீதி முழுமையிலும் பாதணி அணிவதைத் தவிர்த்துதவுமாறு மிகவும் விநயமாகவும் பணிவாகவும் வேண்டிக்கொள்கின்றேன். (ம)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.8

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ம)

## சமுர்த்தி வங்கிச் சங்க திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஓக.8

புங்குடுதீவு பெருங்காட்டுச் சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.(ம-1-111)

# இலங்கைக்கு வெற்றி இலக்கு 352 ஓட்டங்கள்: 5 விக்கெட்டுகள் கைவசம்; இன்னும் தேவை 90

கொழும்பு, ஓக.8

சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்டில் இலங்கையணிக்கு வெற்றி இலக்காக 352 ஓட்டங்களை தென்னாபிரிக்கா நிர்ணயித்துள்ளது. வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கையணி நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 262 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஆடுகளத்தில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 77 ஓட்டங்களுடனும் பிரசன்னஜெயவர்த்தன 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.




ஆரம்பத்தில் ஜெயசூரியா நம்பிக்கை தரும் விதத்தில் அதிரடியாக ஆடினார். 74 பந்துகளை எதிர்கொண்ட அவர் 3 சிக்ஸர்களுடன் 73 ஓட்டங்களைக் குவித்து நிக்கி போஜேயின் பந்தில் ஆட்டமிழந்தார். மற்றைய ஆரம்ப வீரரான உபுல் தரங்க ஓட்டமெதுவும் பெறாது ஆட்டமிழந்து ரசிகர்களை ஏமாற்றினார்.

முன்னதாக, 257 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகள் இழப்பு என்ற நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தைத் தொடங்கியது தென்னாபிரிக்கா. பௌச்சர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். எனினும் முரளிதரன் தன் கைவரிசையைத் தொடர்ந்து காட்ட 311 ஓட்டங்களுக்கு தென்னாபிரிக்காவின் இரண்டாம் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. மிகுதி மூன்று விக்கெட்டுகளையும் முரளியே கைப்பற்றினார். கடைசி விக்கெட்டாக பௌச்சர் 65 ஓட்டங்களுடன் முரளியின் பந்துவீச்சில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முரளிதரன் இந்த ஆட்டத்தில் 225 ஓட்டங்களைக் கொடுத்து 12 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதன் மூலம் தொடர்ந்து நான்கு டெஸ்ட் ஆட்டங்களில் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய தனது சாதனையை முரளி சமப்படுத்தியுள்ளார். இங்கிலாந்துக்கு எதிராக நொட்டிங்கம் டெஸ்டில் 11 விக்கெட்டுகளையும் பிரிமிங்கம்டெஸ்டில் 10 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்த முரளி தென்னாபிரிக்காவிற்கு எதிரான முதல் டெஸ்டிலும் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

டெஸ்ட் ஆட்டம் ஒன்றில் இலங்கையணி நான்காவது இன்னிங்ஸில் துரத்திப்பிடித்து வெற்றிபெற்ற இலக்கு 326 ஓட்டங்களே. 1998 ஆம் ஆண்டு சிம்பாப் வேயிற்கு எதிராக 5 விக்கெட்டுகளை இழந்து இந்த வெற்றிஇலக்கு அடையப்பட்டது. இந்நிலையில் தென்னாபிரிக்கா நிர்ணயித்துள்ள 352 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை இலங்கையணி அடையுமாயின் தேசிய சாதனையாக அது பதியப்படும்.

இன்னும் ஒருநாள் மீதமாக இருக்கையில் வெற்றிபெற 90 ஓட்டங்கள் இலங்கை அணிக்குத் தேவையாக உள்ளது. 5 விக்கெட்டுகள் கைவசம் உள்ள நிலையில் வெற்றி இலக்கை இலங்கையணி இலகுவில் அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# நல்லூரில் இடையூறுகளை கட்டுப்படுத்த விசேடபடை!

யாழ்ப்பாணம்,ஓக.8

நல்லூர் உற்சவகாலத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் சக்திகளைக் கட்டுப்படுத்த சிறப்புத் தொண்டர் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மாணவர் ஒன்றியம் இந்தப் பிரிவை உருவாக்கியுள்ளது.

விசேட தொண்டர் பிரிவு நேற்றுமுதல் தனது கடமையை ஆரம்பித்துள்ளது என்று ஒன்றியத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது.

"பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் ஒன்று கூடுகின்ற நல்லைக் கந்தன் மகோற்சவ காலங்களில் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் விசமிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

"சென்ற வருடம் இனங்காணப்பட்ட பெண்கள் பலர் இம்முறையும் தென்னிலங்கையில் இருந்து வருகை தந்து நல்லூர்ச் சூழலில் நடமாடுகின்றனர். எனவே, மக்கள் விழிப்பாக இருப்பதோடு கடமையில் உள்ள தொண்டர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கிறோம்" - என்று அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது. (ம)

## நல்லூரில் இன்று மஞ்சத் திருவிழா

நல்லூர்,ஓக.8

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவின் 10ஆவது நாளான இன்று மஞ்சத் திருவிழா இடம்பெறும்.

இன்று மாலை 5.30 மணிக்கு மஞ்சத்தில் முருகப் பெருமான் வெளிவீதியுலா வருவார்.

(ம-111-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை மட்டுப்படுத்தப்படாத யுத்தமாக விரியும்

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு முழு யுத்தத்துக்குரிய அளவில் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால், இரு தரப்பினருமே தாங்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிக்க விரும்புகின்றார்கள் என்றே கூறி வருகின்றனர். அதுதான் அத்தரப்புகளின் ஒரே நிலைப்பாடு என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள், நோர்வே அனுசரணைத் தரப்பினர் முதல் சர்வதேச சமூகத்தினர் வரை அனைவரும் கருதிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தத் தரப்புகளின் செய்திகள், தகவல்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகளின் நிலைப் பாட்டையும் இலங்கை அரசுத் தலைமை எடைபோடுகின்றது போலும்.

மோதல் நடைபெறும் இடங்களில் ஆங்காங்கே போர் முனைகளைப் புலிகள் திறந்தாலும் முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குப் போகும் எண்ணம் புலிகளுக்கு இல்லை. முழு அளவிலான போரை இன்றைய நிலையில் எதிர்கொள்ளவும் அவர்களால் இயலாது என்ற கருத்து நிலைப்பாடுதான் அரசுத் தலைமைக்கு இருப்பது போலப் படுகின்றது.

மாவிலாறு கால்வாய்ப் பிரச்சினை உட்பட அண்மைக் காலத்தில் புலிகளுடன் தொடர்புபட்ட விடயங்களை அரசுத் தரப்பு கையாண்ட முறைமைகளைப் பார்க்கும்போது இப்படித்தான் அரசுத் தலைமை கருதியிருக்கின்றது என்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

உலகிலேயே யாரும் எதிர்பார்க்காத - நம்ப முடியாத - தீர்மானங்களை எடுத்து, பலரையும் அதிர்ச்சிக்குள்ளும், ஆச்சரியத்துக்குள்ளும் ஆழ்த்தும் வகையில் செயல்படும் ஒரு விடுதலை இயக்கத்துடன்தான் தாம் விடயங்களைக் கையாள்கிறோம் என்பதை இலங்கை அரசு மறந்து செயற்படுவதால்தான் இத்தகைய கணக்கும், கணிப்பீடும் என்று கருத வேண்டியுள்ளது.

உலகின் மிகப் பெரிய இராணுவ வல்லாதிக்க நாடான இந்தியாவையே இராணுவ ரீதியில் - யுத்தத்தில் - எதிர்கொள்ளும் முடிவை சர்வதேசமே எதிர்பாராத வகையில் எடுத்து, இரண்டரை ஆண்டுகள் உலகின் நான்காவது பெரிய இராணுவத்துடன் நின்று, நிலைத்து, மோதி, தன்னை ஸ்திரப்படுத்தி, நிலைப்படுத்திக் காட்டிய ஒரு விடுதலைப் போராட்ட அமைப்புடனும், என்றும் அச்சுறுத்தலுக்குத் தலை வணங்காத அந்த அமைப்பின் தலைவருடனும்தான் விடயங்களைத் தாங்கள் கையாளுகின்றோம் என்பதை இன்றைய இலங்கை அரசுத் தலைமை மறக்காமல் இருப்பது நல்லது.

ஆகவே, முழு அளவிலான யுத்தத்துக்குப் புலிகள் போக மாட்டார்கள் என்ற பொதுவான பேச்சை - கருத்தியலை - நிலைப்பாட்டை - நம்பி, காய்களைஅதற்கேற்றவாறு நகர்த்தி, ஏமாறுவதை அரசுத் தரப்பு தவிர்ப்பதே சிறந்தது.

*''தமிழர் தாயகப் பிரதேசங்கள் மீது மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கைகள் என்ற சாட்டில் வான் வழித் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்கள், படை நடவடிக்கைகள் போன்ற வலிந்து தாக்கும் நடவடிக்கைகளையும் அரசுத் தலைமை இனியும் மேற்கொள்ள முயற்சிக்குமானால் அது போர் நிறுத்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டு முழு அளவிலான போரைப் பிரகடனம் செய்யும் நடவடிக்கையாகவே கருதப்படும்.''*

- என்று நோர்வே ஊடாக அரசுக்குப் புலிகள் அனுப்பியிருக்கும் எச்சரிக்கையை இந்தப் பின்னணியில்தான் நாம் நோக்க வேண்டும்.

தற்போதைய யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி , அரசு, புலிகள் ஆகிய இரு தரப்புகளில் ஏதோ ஒரு தரப்பு யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறி முழு அளவிலான யுத்தத்துக்குச் செல்ல விரும்பினால், அதற்காக இரண்டு வார கால எழுத்து மூல முன்னறிவித்தலை வழங்க வேண்டும்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஹன்ஸ்ன் போவர் ஊடாகப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அரசுக்கு அனுப்பிய எச்சரிக்கை அத்தகைய முன்னறிவித்தல் 'நோட்டீஸ்' ஆகவே கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஆக, திகதியிடப்படாமல் கொடுக்கப்பட்டிருக்கும் முன்னறிவித்தல் இது. அவ்வளவுதான்.

புலிகள் சுட்டிக்காட்டியபடி, அத்தகைய வலிந்து தாக்கும் போர் நடவடிக்கையை அரசுத் தரப்பு முன்னெடுக்குமானால் அன்றைய திகதியை, அந்த முன்னறிவித்தல் 'நோட்டீஸ்' இற்கான திகதியாகக் கணித்துக் கொள்ளுங்கள் என்ற சாரப்படவே நோர்வேத் தரப்புக்கு புலிகள் விளக்கம் கொடுத்திருக்கின்றனர் என்று கருதப்படுகிறது.

இந்த உண்மை புரியாமல், இனியும் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை, விமானக் குண்டு வீச்சு என்று அரசுத் தரப்பு நொட்டிக் கொண்டிருக்குமானால் விளைவு முழு அளவு யுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதாகவே அமையும்.

அதற்கு அரசுத் தரப்புத் தயாரானால் அந்த வேலையை அரசுப் படைகள் தொடரலாம். விளைவுகளை எதிர்கொள்ளலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை என்று இனி ஒரு செயற்பாட்டை ஆரம்பித்தால் அது மட்டுப்படுத்தப்படாத முழு யுத்தமாக விரியும் என்பதே யதார்த்தமாகும்.

# சர்வதேசம் வலுவான செயற்பாட்டில் இறங்கவேண்டிய தருணம் வந்துவிட்டது

## சுட்டிக்காட்டுகிறது அமைதிக்கான ஆதரவுக் குழு

கொழும்பு,ஓக.8

இலங்கையில் அமைதிமுயற்சிகள் மீண்டும் நடைமுறையாவதற்கும், மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் குறைந்தபட்ச மனித உரிமைகளை யாவது பின்பற்றச் செய்வதற்கும் சர்வதேச சமூகம் மேலும் வலுவான முறையில் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது அமைதி பாதுகாப்புக்கான குழு. இது சம்பந்தமாக குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில். சுனிலா அபயசேகர, சுனந்த தேசப்பிரிய, ஜெஹான் பெரேரா, பாக்கியசோதி சரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோ. வில்லியம் ஆகியவர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

இலங்கையின் வடக்கு- கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவது குறித்து நாம் மிகுந்த கவலை அடைந்துள்ளோம். போர்நிறுத்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்புகளையும் உடனடியாக நடவடிக்கை எடுத்து போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம் என்று தெரிவித்துள்ள அமைதி பாதுகாப்புக்கான குழு அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

புலிகள் மாவிலாறு அணைக்கட்டை மூடிய செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பேச்சு மூலம் தீர்க்கப்பட வேண்டிய- தீர்த்திருக்க வேண்டிய ஒரு பிரச்சினை இது. இலங்கை அரசாங்கம், ராணுவநடவடிக்கை எடுத்ததையும் அது முல்லைத்தீவு, மட்டக்களப்புப் பகுதிகளில் புலிகளின் நிலைகளைத் தாக்கும் அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டதையும் நாம் கண்டிக்கின்றோம். அரச படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான ராணுவ மோதல் காரணமாக பொதுமக்களில் அநேகர் உயிர் துறப்பதற்கும் குறிப்பாக திருகோணமலைப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் இடப்பெயர்வுகளுக்கும் வழி கோலியுள்ளது. மூதூர், சேருநுவர பகுதிகளில் உணவு மற்றும் தண்ணீர்ப் பஞ்சமும் மருத்துவ வசதிக்குறைகளும் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. இச் செய்திகளின்படி மனித உரிமை நெருக்கடியொன்று பெரிதாகிக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் நலனையே தமது நடவடிக்கைகள் நோக்கமாகக் கொண்டிருப்பதாக கூறிவருகிறார்கள்.

மோதல்களை நிறுத்துவதின் மூலம் இந்த வார்த்தைப் பிரயோகங்களை நிஜமாக்கும்படி இருதரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றோம். கள நிலையில் ராணுவ மோதல்கள் இடம்பெற்றாலும் அரசும் புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதைப் பாராட்டுகின்றோம். அதே சமயம் இரு தரப்பையும் பேச்சுக்கு மீண்டும் திரும்பும்படி வலியுறுத்துகின்றோம். அணைக்கட்டை திறந்து அப்பகுதியிலுள்ள சகல மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு மட்டுமன்றி இந்தப் பிணக்கை நீண்டகால நிரந்தர அடிப்படையில் தீர்ப்பதற்கான அதிகாரம் மற்றும் வளங்களினைப் பகிர்ந்து கொள்வதற்கான கட்டமைப்புத் தொடர்பானதாகவும் அது இருக்கவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# குடாநாட்டில் மூன்று பிரதேச செயலகங்களின் காணிக்கிளைகளை வலுப்படுத்த நடவடிக்கை

கொக்குவில்,ஓக.8

சாவகச்சேரி, கோப்பாய் மற்றும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளின் காணிக் கிளைகள் வலுப்படுத்தப்படவுள்ளன என்றும்- சம்பந்தப்பட்ட பிரிவுகளில் தீர்க்கப்படாதிருக்கும் காணிப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு செயலணி ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும்-

வடக்கு- கிழக்கு மாகாண மேலதிக செயலாளர் (காணி) க.பரமலிங்கம் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

துரித காணி செயலணிக்குழுவின் வேலைகள் முடிவுற்றதும் சாவகச்சேரி, கோப்பாய், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களில் தீர்வு செய்யப்படாதிருக்கும் காணிப் பிணக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், காணிக்கிளையை வலுவாக்க தளபாடங்கள், காகிதாதிகள் என்பன வழங்கப்படவுள்ளதுடன், காணி உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள், வெளிக்களப் போதனாசிரியர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் மற்றும் காணிக்கிளையில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுடன் செயலணி அமைக்கப்படவுள்ளது.

இவ்வேலைத்திட்டம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 மாதங்கள் நடைபெறவுள்ளது. இதனை உதவி காணி ஆணையாளர் உள்ளிட்ட குழு மேற்பார்வை செய்யவுள்ளது.

மேலும், இந்த வேலைத்திட்டங்களுக்கு பிரதேசசெயலர், காணி உத்தியோகத்தர்/ குடியேற்ற உத்தியோகத்தர் வெளிக்களப் போதனாசிரியர்,நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் இருவர் ஆகியோருக்கு 25 வீத கொடுப்பனவு வழங்கப்படுவதுடன்-

அனுமதிப்பத்திரம் எழுதுவதற்குத் தலா 10 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கும் என்றும்- மேலதிகச் செயலாளர் அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# திருமலையில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முழு அளவில் உதவி

திருகோணமலை,ஓக.8

திருகோணமலையில் நிர்க்கதியாகியுள்ள பத்தாயிரத்திற்கும் அதிகமான அகதிகளுக்கு 24 மணிநேரமும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் நிவாரண உதவிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை கிளை வழங்கி வருகின்றது.

பல மடங்காக அதிகரிக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படும் இந்த அகதிகளைப் பராமரிக்க ஸ்ரீலங்கா அரசின் பாரபட்சமற்ற உதவியையும் புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது.

செஞ்சிலுவைச் சர்வதேச குழு மற்றும் கண்காணிப்புக் குழுவினருக்கும் இதுபோன்ற கோரிக்கைகளை விடுத்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தம்மிடம் உள்ள அனைத்து சேமிப்புகளையும் பயன்படுத்தி போதிய உதவிகளை வழங்கி வருகின்றது.

மேலும், பல ஆயிரம் அகதிகள் வந்த வண்ணமுள்ளதால், திருகோணமலை மாவட்டத்தில் தஞ்சமடையும் அகதிகளைப் பராமரிக்க உதவுமாறு உத்தியோகபூர்வமாக புனர்வாழ்வுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக, தண்ணீர், உணவு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்க முன்வருமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது.

இதற்கிடையில் கிண்ணியா முஸ்லிம் சபை தலைமையிடமிருந்து தங்களது மக்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிடைத்துவரும் உதவிகளுக்கு நன்றி கூறப்பட்டிருக்கும் அதேவேளை, தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவிகள் தேவைப்படுவதாகவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அழிவில் பாதிக்கப்பட்டபோது கிண்ணியா மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முழு அளவில் உதவியது போன்று இந்த இக்கட்டான காலத்திலும் உதவும்படி முஸ்லிம் சபை கோரியுள்ளது.

இதேவேளை - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்:-

மூதூர், கிளிவெட்டி, மெங்காமம், கங்கவெளி, சம்பூர், சேனையூர், கட்டைப்பறிச்சான், கடற்கரைச்சேனை போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன்,அவர்கள்தற்போது தங்கியுள்ள தற்காலிகக் குடியிருப்பு விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இக்கட்டான காலகட்டத்தில் சர்வதேசமெங்கும் வாழும் மக்களும் மனிதாபிமான அமைப்புகளும் உடனடி உதவிகளை வழங்கவேண்டும் என்றும் - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

**நாளை**

ஆடி 24
புதன்கிழமை
09.08.2006
திதி : பூரணை
மாலை : 5.34
நட்சத்திரம் : திருவோணம்
முன்னிரவு : 7.04
சுபநேரம் : 4.34 - 6.04
ராகுகாலம் : 12.4 - 1.34

# ஊர்காவற்றுறைக்கான பஸ் சேவையில் சீரான ஒழுங்கமைப்பு அவசியம் தேவை

கொக்குவில்,ஓக.8

ஊர்காவற்றுறையில் கடமையாற்றும் அலுவலர்களின் நலன்கருதி, யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை இடையிலான பஸ் சேவையில் சீரான ஒழுங்கமைப்பு அவசியம்.

இவ்வாறு ஊர் காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயமாக, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

* சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் நேர அட்டவணைக்கேற்ப குறித்த நேரத்திற்குப் புறப்படவேண்டும்.
* யாழ்ப்பாணத்திலிருந்து அலுவலர்களுக்கான சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் பாதை இல 777 நேர அட்டவணைப்படி சரியாக காலை 7.45 மணிக்கு புறப்பட வேண்டும். இப்பாதை ஊடாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வேறு பாதைகள் ஊடாக சென்று வருவதனால் தாமதங்கள் ஏற்பட்டு வருகின்றது. எனவே, இந்த சேவை குறித்த பாதை ஊடாக சேவையில் ஈடுபடுத்தப்படவேண்டும்.
* யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை 780 பாதை ஊடாக பஸ் சேவை, தற்போது வீதித்திருத்த வேலைகள் ஓரளவு நிறைவடையும் நிலையில் உள்ளமையினால் 780 பாதை ஊடாகவே ஊர்காவற்றுறையைச் சென்றடையலாம்.
* ஊர்காவற்றுறையிலிருந்து மாலை 4 மணிக்குப் புறப்படும் பஸ் நேர அட்டவணைப்படி சரியாகப் புறப்பட வேண்டும் - என்றுள்ளது.

(எ-76)

**உதயவாக்கு**

நம்பிக்கை என்பது கும்மிருட்டில் குதிப்பது அல்ல இருட்டிலிருந்துவெளிச் சத்துக்கு இறக்கை விரிப்பது.

- டேவிற்சீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் எதிர்பார்த்த காலம் கனிந்துவிட்டது!

**போர் ஒன்று இல்லை என்று கூறிக் கொண்டே இரு இராணுவங்கள் கடும் சண்டையில் ஈடுபட்டிருக்கும் விசித்திரம் இலங்கையில் மட்டுமே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. போர் நிறுத்தம் காகிதங்களில் மட்டுமே இருக்கின்றது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. ஆனால், அரசு - புலிகள் இரு தரப்பும் தாம் ஒப்பந்தத்தில் இருந்து விலகிச் செல்ல வில்லை என்று கூறுகின்றனர். போர் ஒன்று வெடித்துள்ள சூழ்நிலையிலும் பிரபாகரன் ஏன் அப்படிக் கூறுகிறார்? அவரது நோக்கம் என்ன?**

**இவை குறித்தெல்லாம் ஆராய்கிறார் கட்டுரையாளர் உப்புல் யோசப் பெர்னாண்டோ.**

**'லங்காதீப' வியாழன் அலசல் பகுதியில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கே தருகின்றோம்.**

ஒருபக்கம் ஆழ்கடலும் மறுபக்கம் கடும் தமிழர்களும் இடையூறாய் இருப்பதாலேயேதான் சுருண்டு முடங்கிப் படுத்திருப்பதாக துட்டகைமுனு தெரிவித்தான் என வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவும் ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள் முதல் இத்தனை காலம் வரை துட்டகைமுனு போன்றே சுருண்டு முடங்கியிருக்க வேண்டியிருந்தது.



விடுதலைப் புலிகளுக்கு எதிராக எதற்காக இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கவில்லையென மஹிந்த ராஜபக்ஷவிடம் கேட்டபோது, ஒருபுறம் இணைத்தலைமை நாடுகளும் மறுபுறம் போர்நிறுத்த உடன்பாடும் இருக்கும் போது பிரபாகரனுக்கு எதிராக என்னால் எப்படி நான் விரும்பும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தாராம்.

தெற்கின் துட்டகைமுனு போன்றே, தெற்கின் மஹிந்த ராஜபக்ஷவும் நீண்ட காலத் துக்கு சுருண்டு முடங்கி இருப்பார் போலத் தோன்றவில்லை.

அணைக்கட்டு நீரைத் திறந்துவிடும் சிக்கல் மூலமாக அவர் கையை மட்டும் நீட்டியுள்ளார் எனக் கருத வேண்டியுள்ளது. இதன் மூலம் என்னதான் ஆகப்போகின்றதோ? அது குறித்துத் தற்போது எதுவும் கூறமுடியாதுள்ளது.

கடந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்த அனைவருமே இவ்வாறு தான் கேட்டுக்கொண்டார்கள்.

### இதுதானா சமாதானம்

இன்று இந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்புப் படையினர், பொலீஸார் ஆகிய எந்தவொரு தரப்பாலும் கிளிநொச்சிக்குச் செல்ல இயலாது. இதுதானா சமாதானம்?

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளித்த வாக்காளர்களது மேற்கூறியவாறான கேள்விபோன்றே தேர்தல் பிரசாரத்தின்போது மஹிந்த ராஜபக்ஷவும் மேடைக்கு மேடை இதே கேள்வியைத் தான் எழுப்பிவந்தார்.

கிளிநொச்சிக்குச் செல்ல இயலாவிட்டால், தடைகளை நீக்கத் தாக்குதல் மேற்கொண்டு வெற்றி கொண்டாவது சென்றாக வேண்டும் - என்றார்

இதனை நிறைவேற்றி வைப்பார் என்ற நம்பிக்கையிலேயே அத்தனை வாக்காளர்களும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்து அவரை நாட்டின் ஜனாதிபதியாக்கி வைத்தனர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவிறேற்ற பின்னரும் வாக்காளர்களின் அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைக்கவில்லை. பொலீஸாரையும் பாதுகாப்புப் படையினரையும் கிளிநொச்சிக்கு அனுப்ப இயலாது, ஏன் இராணுவத் தளபதியே இராணுவத் தலைமையத்தில் பாதுகாப்பாகத் தங்க இயலாத நிலை மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் ஏற்பட்டது. ஜனாதிபதியால்கூட கிளிநொச்சிக்குச் செல்ல இயலாது அலரிமாளிகை வளாகத்தில் கூடப் பாதுகாப்பாக உலாவ இயலாத நிலை உருவாகியது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ கூட்டுத் தலைமை நாடுகள், நோர்வே, இந்தியா ஆகிய தரப்புகள் சொல்பவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டு வாளாவிருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு இதற்காகவா நாம் வாக்களித்தோம்?

அவருக்கு ஆதரவாக வாக்களித்தோரில் சிலர் இவ்விதம் கேள்வி எழுப்பத் தலைப்பட்டனர். ஆனால், மஹிந்த ராஜபக்ஷவோ சுருண்டு முடங்கியே இருந்துவந்தார். கெப்பிட்டிக்கொல்லாவவில் பொதுமக்கள் பெரிய அளவில் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னரும்கூட மஹிந்த ராஜபக்ஷ சுருண்டு முடங்கியே இருந்துவந்தார்.

இதோ! இப்போதுதான் மஹிந்த ராஜபக்ஷ தனது கைகால்களை நீட்டி மடக்கி களத்தில் இறங்க ஆயத்தமாகியுள்ளார் போலிருக்கிறது.

அப்படியானால் பிரபாகரனின் நிலைப்பாடு தானென்ன?

பிரச்சினையே அங்குதானுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு முடிவுக்கு வந்துள்ளது என அறிவியுங்கள்.

இவ்வாறு பிரபாகரன் நோர்வேத் தரப்பு மீது அழுத்தம் பிரயோகிக்கக்கூடும்.

குழப்பமாக இருக்கிறதே! பிரபாகரன் ஏன் அவ்விதம் நோர்வேத் தரப்பு மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

இத்தகைய கேள்வி எழுவது நியாயமானதே!

### பிரபாகரனின் குறிக்கோள்

உண்மையில் யுத்தம் விடுதலைப் புலிகளால்தான் மீண்டும் ஆர்பிக்கப்படவில்லையென்ற நோர்வேயின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்வதே பிரபாகரனின் இன்றைய குறிக்கோளாகும்.

மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் ஜனாதி பதியாகதேர்ந்தெடுக்கப்பட்ட கையோடு இத்தகையதொரு உறுதிப்படுத்தலை நோர்வேத் தரப்பிடமிருந்து பெற்றுக் கொள்ள இயலுமெனப் பிரபாகரன் நம்பினார்.

உண்மையில் கிளிநொச்சிக்குப் பெரும்பான்மை இனத்தவர் எவரும் செல்ல இயலாதுள்ளதாக தமது ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் மஹிந்த ராஜபக்ஷ எதிர்த்தரப்பான ஐ.தே.கட்சியை விமர்சித்து வந்ததைக் கொண்டு, மஹிந்த ஜனாதிபதியானதும் பாதுகாப்புப் படையினரை கிளிநொச்சியை மீட்டெடுப்பதற்காக அனுப்புவாரென பிரபாகரன் எதிர்பார்த்தார். அத்தகைய சூழலொன்று உருவாக வேண்டுமெனவும், அப்படி உருவாகுமானால் பாதுகாப்புப் படையினரை ஓட ஓட விரட்டிக் காட்டுகிறேன் எனவும் கூறி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் வரை தனது குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகப் பிரபாகரன் தம்மைத் தயார்ப்படுத்தி வந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவை யுத்தமொன்றில் சிக்க வைத்து தமது பலத்தை நிரூபித்துக் காட்ட எதிர்பார்த்திருந்த பிரபாகரனுக்கு ஆரம்பத்தில் ஏமாற்றமே ஏற்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்ததும் கடைப்பிடிக்க ஆரம்பித்த அணுகுமுறை காரணமாகத் தமது பலத்தை நிரூபித்துக் காட்ட வழியின்றி தமது அமைப்பின் உறுப்பினர்களூடாக அரசுக்கு எதிராக உறும ஆரம்பித்தார் பிரபாகரன்.

"கொழும்பு மாநகரைத் தீயில் கருகச் செய்வோம் கொழும்பு நகரமொன்று என்று ஒரு நகரம் இருந்ததா? இல்லையா? எனத் தேடிக் கண்டுபிடிக்க இயலாதவாறு கொழும்பு நகரத்தையே தீயிடுவோம். பாரிய அழிவொன்றை இலங்கை சந்திக்க வேண்டி ஏற் படும்."

மேற்குறிப்பிட்ட விதத்தில் பிரபாகரனின் விடுதலைப் புலி உறுப்பினர்கள் உறுமத் தொடங்கினர்.

இந்த ஆண்டின் கறுப்பு ஜூலையும் வந்து போய்விட்டது. விடுதலைப் புலிகளின் வீரப் பிரதாபப் பேச்சுகளுக்கு என்னவாயிற்று?

### உறுமிப் பயமுறுத்தாத புலிகள்

பொதுமக்கள் இவ்வாறு கேள்வியெழுப்ப ஆரம்பித்தனர்.

பொதுவாக ஈழயுத்த வரலாற்றை அவதானித்தால், விடுதலைப் புலிகள் பெரும்பாலும் ஒருபோதும் உறுமிப் பயமுறுத்துவதில்லை. இருந்தாற்போலிருந்து திடீரென்று மழையாகப் பொழிவதுதான் அவர்களது வழக்கமான பாணி. அதிலும் கறுப்பு ஜூலை வேளைகளில் கடும் மழையாகப் பொழிவதுண்டு.

ஆனால், போர்நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து அமைதியாயிருந்து வந்த விடுதலைப் புலிகள் ரணிலின் அரசுடனான சமாதானப் பேச்சுகளில் கலந்து கொள்ள மறுத்து பேச்சுகளைப் புறக்கணித்த நாள் முதல் மீண்டும் உரத்து உறும ஆரம்பித்தனர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாளிலிருந்து விடுதலைப் புலிகள் தமது உறுமல்களுக்கு மேலதிகமாக இடிபோன்றும் முழங்க ஆரம்பித்தனர். ஆனாலும் மழைபொழியும் அறிகுறி எதனையும் காணமுடியவில்லை. வழக்கமாக கறுப்பு ஜூலை காலத்தில் கடும் மழையாகப் பொழிவது அவர்களது வழக்கமானாலும்கூட இம்முறை மெல்லிய தூறலைக் கூடக் கேள்விப்பட முடியவில்லை.

ஒருவேளை பிரபாகரனும் தற்போது அனுருத்த ரவத்வத்தை போன்று செயற்பட முனைகிறாரா?

யுத்தத்தைக் குறிப்பிட்ட நாளில் ஆரம்பித்து இத்தனை நாள்களுள் முடித்துவைத்து வெற்றி வாகை சூடுவோம் என்று யுத்த ஆயத்தங்களில் ஈடுபடும் வேளையிலேயே ஊடகங்களுக்கு வாய்ச் சவடால் அடித்து, பின்னர் பின்னடைவைச் சந்திக்க நேர்ந்தமையால் ஊடகங்களின் கேலிக்கு உள்ளான அனுபவம் அனுருத்த ரத்வத்தைக்கு உண்டு.

அதேபோன்று, பிரபாகரனும் தாக்கப் போகிறோம் தாக்கப்போகிறோம் என்று வெருட்டினாலும் கடந்து போன கறுப்பு ஜூலை தினத்தில்கூட தமது அத்தகைய நோக்கத்தைச் செயல்வடிவில் காட்டவில்லையே?

அப்படியானால் பிரபாகரன் தற்போது 'நொக் அவுட்டா'?

பொதுமக்கள் மனதில்இவ்வித எண்ணமும் தலைதூக்கக் கூடும்.

அண்மையில், இந்தியாவின் பிரபல பயங்கரவாதத் தடுப்பு மையத்தின் தலைவர் மைக்ஹில் என்பவர் 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்குத் தெரிவித்திருந்த கருத்து இந்தச் சந்தேகத்துக்கான பொருத்தமான உதாரணமாகக் கொள்ளத் தக்கதாகும்.

"தற்போது பிரபாகரனால் முன்னர் போல் செயற்பட இயலாது"

இதுவே மைக்ஹில் பிரபாகரனின் இன்றைய நிலைப்பாடு குறித்து வெளியிட்ட கருத்தான போதிலும் அதன் உள்ளார்த்தம் - அவர் சொல்லாமல் சொன்ன செய்தியொன்றும் அந்தக் கருத்தில் புதைந்துள்ளது.

பிரபாகரன் தற்போது நலிவடைந்து போயுள்ளார் என அவர் அர்த்தப்படுத்தவில்லை. பிரபாகரனுக்குத் தற்போது போரிடும் பலம் இல்லை எனக் கூட அவர் கூற வரவில்லை. பயங்கரவாதத்தை ஒழித்து விடுவதற்காக உலகமே ஒன்று திரண்டு வரும் இன்றைய நிலையை அவதானிக்கும் போது பிரபாகரன் எவ்வளவுதான் பலமுள்ளவராக இருந்த போதிலும் இதற்கு முன்னர் இலங்கை அரச படையினருக்கு எதிராகத் தாம் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதல்கள் போன்ற எதனையும் அவரால் தற்போது இலேசில் ஆரம்பிக்க இயலாது என்ற கருத்தையே மைக்ஹில் அத்தனை ரத்தினச் சுருக்கமாக ஒரே வாக்கியத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

அவரது அந்தக் கருத்து முற்றிலும் நிதர்சனமானதொன்றே. கடும்பாதுகாப்பு ஏற்பாடு களுடன் கூடிய இராணுவத் தலைமையத்தினுள் ஊடுருவி இராணுவத் தளபதி மீதே குண்டுத் தாக்குதல் மேற்கொள்ள வைக்கும் அளவுக்கு பிரபாகரன் சக்திமிக்கவரே.

ஆனால், பிரபாகரனால் போர்நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் கொழும்பு நகரில் தாம் மேற்கொண்ட தாக்குதல்கள் போன்றோ, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் தான் மேற்கொண்ட தாக்குதல் போன்ற எதனையுமே இன்று இலேசில் மேற்கொண்டுவிட இயலாது.

ஏனெனில், அமெரிக்கத் தலைநகரில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் உலகில் எந்தவொரு நாடும் தத்தமது தலைநகரங்கள் மீது தாக்குதல் இடம்பெறுவதை இலேசில் சகித்துக் கொள்ளப் போவதில்லை.

தாக்குதல் மேற்கொள்ளும் எந்தத் தரப்பானாலும், தமது அத்தகைய தாக்குதல் சுதந்திரப் போராட்டத்துக்கான முயற்சியே என அவை அடையாளப்படுத்த முயன்றாலும் கூட இன்று உலக நாடுகள் அத்தகைய காரணத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை; அத்தகைய தாக்குதலை சகித்துக் கொள்ளப் போவதுமில்லை.

அமெரிக்க நகரங்கள் மீது ஒஸாமா பின் லேடன் தாக்குதல் மேற்கொண்ட நாள் முதல் பிரபாகரன் ஓரளவு மனக்குழப்பத்துடனேயே இருக்க நேர்ந்துள்ளது.

தமிழ்மக்களது சுதந்திரத்துக்கான போராட்ட நோக்கில் மேற்கொள்ளப்படும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்றுக்கும் பயங்கரவாத நோக்குடன் மேற்கொள்ளப்படும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்றுக்கும் இடையே எந்தவொரு வேறுபாட்டையும் காணஇயலாத நிலையே பிரபாகரனுக்கு இத்தகைய மனக்குழப்பத்தை ஏற்படுத்தக் காரணமாயிற்று.

உலகத்தில் இன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்றுக்கான பெறுமதி நியாயமற்ற - தவறான விதத்தில் அர்த்தப்படுத்தப் பட்டு வருகின்றதென அண்மையில் இடம்பெற்ற கரும்புலிகள் நினைவு நிகழ்ச்சியொன்றில்



விடுதலைப் புலிகள் தலைவர்களிலொருவர் குறைப்பட்டுக்கொண்டார். அதாவது, அமெரிக்க நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் உலக மக்களுக்குத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்பது பெறுமதியற்ற வெறுப்புக்குரியதொன்றாகஅமைந்துவிட்டது.

பிரபாகரன் இந்த யதார்த்தத்தை நன்கு தெரிந்து வைத்துள்ளார். மேற்குலக பலவான்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் ஐ.நா.சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளும்

**தமிழில்: வீயெஸ்ரி**

ஒன்றிணைந்து கொண்டுள்ளன. உலக பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள மேற்குலக பலவான்களது மன வைராக்கியத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். நாம் சர்வதேச சமூகத்தின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு கௌரவமளிப்போம்.

பயங்கரவாதம் தொடர்பான இன்றைய உலகநாடுகளின் நிலைப்பாடுகளை நன்கு புரிந்துகொண்ட காரணத்தினாலேயே பிரபாகரன் 2001ஆம் ஆண்டின் மாவீரர் தின உரையின்போது மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டதுமட்டுமன்றி போர்நிறுத்த உடன்பாட்டை மேற்கொண்டு ஷபாரி பாணியில் உடையணிந்து காட்டின் மத்தியிலிருந்து வெளிவந்து இதோ இப்போது என்னைப் பயங்கரவாதியென்று எவராலும் கூறஇயலாது எனத்தெரிவிக்கவும் செய்தார்.

இந்த சயனைற் குப்பி எமது கழுத்தில் தொங்கும் வரை நாம் உலகத்தில் எந்தவொரு சக்திக்கும் அஞ்சப்போவதில்லை. அதற்கு முந்திய தமது மாவீரர்தின உரையின்போது மேற்கண்ட விதத்தில் கருத்து வெளியிட்டிருந்த பிரபாகரன், அமெரிக்க நகரங்கள் மீது பின்லேடனால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இடம்பெற்ற நாளிலிருந்து தமது சகல

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலையின் அபிவிருத்திப்பணிகள் கடமைபுரியும் ஊழியர்களிடமே தங்கியுள்ளது

சங்கானை, ஓக.8

ஒவ்வொரு வைத்தியசாலையின் அபிவிருத்தியும் அங்கு கடமைபுரியும் ஊழியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சங்கானை வைத்தியசாலைக்கு மக்கள் வங்கியின் 45 ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு சங்கானை மக்கள் வங்கி ஊழியர்களால் கணனி இயந்திரம் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது-

ஒவ்வொரு வைத்தியசாலையின் வளர்ச்சியும் அபிவிருத்தியும் அங்கு கடமை புரியும் வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள், பொதுமக்கள், அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதனால் அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இந்த வைத்தியசாலையின் முன்னேற்றத்தில் இங்கு பணியாற்றும் ஊழியர்களின் பங்கினை அறியமுடிகிறது. இந்த வைத்தியசாலைக்கு தேவையான உதவிகளையும் நிதி ஒதுக்கீடுகளையும் சுகாதாரத் திணைக்களம் மூலம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மக்கள் வங்கி முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை தனது உரையில் தெரிவித்ததாவது-

மக்கள் வங்கி ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இந்த வைத்தியசாலைக்கு கணனி இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதுதவிர இவ்வருட இறுதிக்குள் பூங்கா ஒன்றும் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (204-29)

## கைவிடப்பட்ட கிணறுகளிலிருந்து துர்நாற்றம்

கரவெட்டி,ஓக.8

திக்கம் மானாண்டிப் பகுதியில் உள்ள கைவிடப்பட்ட கிணறுகளில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிணறுகள் உள்ள பகுதியில் இராணுவக் காவலரண்கள் அமைந்துள்ளது என்றும் -

இதனால் கிணறுகளில் இருந்து வரும் துர்நாற்றம் குறித்து அறியமுடியாது உள்ளது என்றும் - பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ-204-70)

## இதுவரை கிடைக்காத பாடநூல்களின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்து

தென்மராட்சி,ஓக.8

பாடசாலை மாணவர்களுக்கு இதுவரை கிடைக்காத பாடநூல்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.அரச அதிபர் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களையும் கேட்டுள்ளார்.

பாடசாலைக்ள் இவ்வருடம் ஆரம்பித்து 7 மாதங்கள் முடிவடைந்த போதிலும், இதுவரை தரம் 7, தரம் 8 ஆகிய மாணவர்களுக்குரிய அனைத்துப் பாடப்புத்தகங்களும் -

தரம் 3 மாணவர்களுக்குரிய ஆங்கில பாட வாசிப்புப் புத்தகங்களும் ஆங்கிலமொழி மூலம் கற்கும் பாடப் புத்தகங்களும் இதுவரை கிடைக்கவில்லை என்று பாடசாலை அதிபர்கள் முறையிட்டதையடுத்து யாழ்.செயலகத்தினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

## சட்டவிரோத மின்னிணைப்பால் கைதடி·மக்கள் பெரும் சிரமம்

கைதடி,ஓக.8

கைதடி மூத்தானம் புலம் வீதியில் சட்டவிரோத மின்சாரம் பெறுவோரினால் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இருந்து கைதடி ஊற்றல் மயானத்துக்கு செல்லும் மின் இணைப்பில் இருந்து சட்டவிரோதமாக மின்சாரம் பெறப்பட்டு வருகிறது.

இதனால் மின்சாரம் அக்கடி தடைப்படுவதுடன் வலுக்குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்தவேண்டியுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களாக மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டுள்ளதாகவும் -

இதனால் இரவு நேரக் கற்றலில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை அடைகின்றனர் என்றும் கூறப்பட்டது. (எ-204-75)


## திருமுறைப் பெருவிழா நாளை நல்லூரில்

யாழ்ப்பாணம்,ஓக.8

அகில இலங்கை திருமுறை மன்றம் நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி ஆலய அனுசரணையுடன் நடத்தும் திருமுறைப் பெருவிழா நாளை புதன் கிழமை காலை 7 மணிக்கு கைலாசநாத சுவாமி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம், சைவ சமயகுரவர் நால்வருக்கும் திருமுறை நூல்களுக்கும் விசேட பூசை தீபாராதனைகள் என்பன இடம் பெறும்.

தொடர்ந்து திருமுறைப் பண்ணிசை, திருமுறை இசைவல்லாளர் கௌரவிப்பு போன்றனவும் இடம்பெறும். (204)




யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் கடந்த புதன்கிழமை இரத்ததானம் வழங்கினர். யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த இரத்ததான நிகழ்வில் 48 மாணவிகள் இரத்ததானம் செய்துள்ளனர். மாணவிகள் இரத்தானம் செய்வதை முதலாவது படத்திலும் இரத்தானம் வழங்குவதற்காகக் காத்திருக்கும் மாணவிகளை இரண்டாவது படத்திலும் காணலாம். (202)




## ஹாட்லியில் இடம்பெற்றுவந்த கட்டடப் பணிகள் நிறுத்தம்

கரவெட்டி,ஓக.8

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கட்டடங்கள் நிறுவும் பணிகள் கடந்த சில மாதங்களாக இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் அபிவிருத்தித் திணைக்களம் மேற்படி கல்லூரியில் 80 லட்சம் ரூபா செல்வில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் விளையாட்டு மத்திய நிலையம், இணைப்பாளர் செயற்பாட்டு அறை, ஆங்கில செயற்பாட்டு அறை போன்றவற்றுக்கு நிரந்தரக் கட்டம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வந்தன என்றும் -

அவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும் - பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (204-70)

## அனலைதீவு ஆஸ்பத்திரிக்கு புதிய பொறுப்பதிகாரி

குருநகர்,ஓக.8

அனலைதீவு சுற்றயல்கூறு வைத்தியசாலையின் புதிய பொறுப்பு வைத்திய அதிகாரியாக டாக்டர் ஏ.கமலநாதன் கடந்த மாதம் 21ஆம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சுற்றயல்கூறு சங்கானையில் இருந்து சுழற்சிமுறையில் இக்கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

அனலைதீவில் பொறுப்பு வைத்திய அதிகாரியாகக் கடமைபுரிந்த டாக்டர் எஸ்.கே. நடராசா முன்னர் கடமைபுரிந்த தமது நிரந்தர வைத்திய நிலையமாகிய தொல்புரம் மத்திய மருந்தகத்தில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-51)

## ஆலயங்களில் நாளை யசுர்வேத உபாகர்மம்

யாழ்ப்பாணம்,ஓக.8

அந்தணர்களுக்குரிய பிரதான சடங்கான யசுர்வேத உபாகர்மம் நாளை புதன்கிழமை ஆலயங்களில் நடைபெறவுள்ளது.

அந்தணர்கள் அனைவரும் அன்றைய தினம் வேத ஆகமங்களை ஓதி தங்களது பூநூல்களை மாற்றி வேள்விகள் செய்வது வழக்கம்.

இதற்கிடையில் -

நியந்திரீ ஏற்பாடு செய்துள்ள உபாகர்மம் நிகழ்வுகள் நாளை காலை 7 மணிமுதல் நல்லூர் சிவன் ஆலயத்தில் நடைபெறும். (எ)

## மேய்ச்சலுக்கு செல்லும் மாடுகள் கடத்தப்படுவதாக முறைப்பாடு

தென்மராட்சி,ஓக.8

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு வரும் மாடுகள் சாவகச்சேரிப் பகுதியில் பிடிக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வயல் நிலங்களில் கயிற்றுத்தடம் வைத்து மாடுகள் பிடிக்கப்படுதாகவும் - இவ்வாறு பிடிக்கப்படும் மாடுகள் காலை வேளையில் வாகனங்களில் ஏற்றிச்செல்லப்படுவதாகவும் கூறப்பட்டது.

தாங்கள் மீளக்குடியமரும் வரை தமது பிரதேசத்தில் கைவிட்டு வந்த மாடுகளை பிடிக்க எவருக்கும் அனுமதி வழங்க வேண்டாமென பிரதேச மக்கள், படையினர் உட்பட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-117)



வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத்துக்கு என திக்கம் பகுதியில் வெளி இணைப்பு இயந்திரப் பயிற்சிநிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் போரூட் நிறுவன வதிவிடப் பிரதிநிதி அடிக்கல் நடுவதையும் அருகில் அருட்திரு. ம.பத்திநாதன் அடிகளார், திட்ட இணைப்பா[illegible] கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் டொன்[illegible] ஆகியோர் [illegible] காணலாம். (173-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த முகாமைத்துவ பயிற்சிக்காகப் பயணம்

யாழ்ப்பாணம்,ஓக.8

உலக வங்கி வீடமைப்புத் திட்டத்தின் யாழ். மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் குறுகியகாலப் பயிற்சி நெறி ஒன்றுக்காக தாய்லாந்து சென்றுள்ளார்.

''அனர்த்த முகாமைத்துவம்'' தொடர்பான பயிற்சியைப் பெறுவதற்காக அவர் தாய்லாந்து பயணமாகியுள்ளார். தாய்லாந்து பயிற்சிநெறி பூர்த்தியடைந்ததும் அதன் பின்னர் அவர் ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பயிற்சிப் பட்டறையிலும் பங்குகொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஓக.8

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் கே.ஹரிஹரசக்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் ஆர்.வசந்தசேனன் முதன்மை விருந்தினராகவும், சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரி. எங்கரசு சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நிறுவுநர் நினைவுரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.ஞானசுந்தரமூர்த்தி நிகழ்த்துவார். (204)



யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினரால் வண்ணார்பண்ணை இளையதம்பி மகாவித்தியாலய மாணவர்களுக்கு 65 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகப்பைகள், கற்றல் உபகரணங்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வித்தியாலய அதிபர் மு.செல்லையா உரையாற்றுவதையும் றோட்டறக்ட் கழக இளைய தலைமுறை இயக்குநர் றோட்டேறியன் லலித், மாணவன் ஒருவனுக்கு கற்றல் உபகரணம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (203)

## அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா

அனலைதீவு நயினாகுளம் ஸ்ரீ அரிஹர புத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ளும் அடியார்களின் நலன்கருதி விசேட படகுச் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

அடியார்கள் திருவிழாக்களில் கலந்து கொள்ளும் பொருட்டு தினமும் காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகத்தில் இருந்து அனலைதீவுக்கும் - பிற்பகல் 2 மணிக்கு அனலைதீவிலிருந்து கண்ணகை அம்மன் கோயில் துறைமுகத்துக்கும் விசேட படகுச் சேவை நடத்தப்படுகிறது.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன. இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-204-51)

## நெடுந்தீவு மேற்கு வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்க நிதி உதவி

### 'நிக்கொட்' நிறுவனம் 11 லட்சம் ரூபா ஒதுக்கீடு

நல்லூர், ஓக.8

நெடுந்தீவு மேற்கு நெழுவினியில் சுற்றயல்கூறு வைத்தியசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டடம் அமைப்பதற்கு 'நிக்கொட்' நிறுவனம் 11 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி வைத்தியசாலை முன்னர் புதுக்கடைச் சந்தியில் நடமாடும்வைத்திய சேவையை வழங்கி வந்தது. பின்னர் பல்வேறு வசதிக்குறைவுகளால் நடமாடும் சேவை நிறுத்தப்பட்டது.

தற்போது இவ் வைத்தியசாலைக்கு என ' நிக்கொட்' நிதியுதவியுடன் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவை நிறைவு பெற்றதும் வைத்திய சேவைப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என வைத்தியசாலை வட்டராங்கள் தெரிவித்தன. (எ-204 - 111)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




திரு.திருமதி சுமித்திரன் - ரமா
தம்பதியரின் செல்வப் புதல்வன்

## தாருஜன்

தனது முதலாவது பிறந்தநாளை அரியாலையில் உள்ள தனது இல்லத்தில் இன்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, ஜேர்மனியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா மற்றும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அத்தைமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், மீசாலையில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, மாமா மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அப்பப்பாமார்,அப்பம்மாமார், தாத்தாமார், அம்மம்மாமார்,சித்தப்பாமார், அத்தைமார், மாமாமீர், பெரியப்பா, பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள், அண்ணாமார், அக்காமார், பாட்டிமார் அனைவரும் அரசடிப்பிள்ளையார் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென தாருக்குட்டியை வாழ்த்துகின்றார்கள்

தகவல்:
17A, இராஜேஸ்வரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
செ.பார்த்தீபன் (சித்தப்பா)
(53018) (39)

நெடுந்தீவு சங்கத்துக்கு அரசினால் வழங்கப்பட்ட

## இழுவைப் படகுகளைத் திருத்த நிதியுதவி வழங்குமாறு கோரிக்கை

நல்லூர்,ஓக.8

நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு அரசு வழங்கிய இரு இழுவைப் படகுகளும் பழுதடைந்துள்ளன. இதனால் அவற்றைப் பயன்படுத்தி கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. எனவே,இவற்றைத் திருத்த அரசு நிதியுதவி வழங்க வேண்டும்.

இவ்வாறு நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத் தலைவர் எஸ்.கோபாலசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி சங்கத்துக்கு அரசினால் இரு இழுவைப் படகுகள் வழங்கப்பட்டன. அவை நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படுவதனால் அவை குறிப்பிடத்தக்க அளவு சேதம் அடைந்துள்ளதுடன், ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போதும் பாதிப்புற்றது.

எனவே, இந்நிலையில் - மேற்படி இழுவைப்படகுகளைத் திருத்துவதற்குரிய போதிய நிதி சங்கத்திடம் இல்லை.

எனவே, அரசு இப்படகுகளை திருத்தி அமைக்க நிதி உதவிகளை வழங்கவேண்டும். இதன் மூலம் படகுகளைப் புனரமைத்து கடற்றொழில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும்- என்று சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (எ-204-111)

## பதவியேற்பு நிகழ்வு

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வு ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பதவியேற்பு வைபவத்தில் டாக்டர் லயன் எஸ்.யோகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (1-11)

## வீதி சீரின்மையால் சிறுப்பிட்டி மக்கள் சிரமம்

சிறுப்பிட்டி மேற்கு - ஞானவைரவர் வீதி கடந்த 32 வருடங்களாக மீள்புனரமைப்பு இன்றி காணப்படுகிறது. இதனால் இவ்வீதியால் போக்குவரத்து செய்வோர் பெரும் சிரமம் அடைகின்றனர்.


புத்தூர் பிரதேசசபையின் கீழ் உள்ள மேற்படி வீதியை புனரமைப்புச் செய்யுமாறு கடந்த 5 வருடங்களாக வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும் இதுவரை வீதியைத் திருத்துவதற்கான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபருக்கு கடித மூலம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என இக்கிராம மக்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.(204-95)

GIT கருத்தரங்கு
A/L 2007 மாணவர்களே
நல்லூர் லயன்ஸ் கழக
ஆதரவில்
IBMS நடாத்தும்
இலவச கருத்தரங்கு
இடம் : IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
காலம் : 09.08.2006 புதன்கிழமை
08.30 மணி முதல் 03.30 மணி வரை
A/L மாணவர்கள் அனைவரும் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்
மேலதிக விபரங்களுக்கு :
INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
# 209, Manipay Road, Jaffna. T P NO : 021 222 3232

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## தர்மராசா சிவானந்தம்

முகிழ்ப்பு 02.02.1977
உதிர்வு 08.08.2005



ஓ நண்பனே ஆனந்தா!
ஓராண்டு முடிந்ததடா! நாம் அழுது
- இன்னும்
ஓயவில்லை என்பதை நீ அறிவாயா?

உற்றமும் சுற்றமும் உனைப் பறித்த
கூற்றுவத்தை வெறுப்பதை
-அறிவாயோ?
பற்றற்ற வாழ்வியலில் உனைப் பிரிந்து
தேற்றுவாரின்றி உணர்வின்றி
-நிற்கின்றோமே

ஆனந்தா! இந்த மண் மைந்தர்
-நினைவில் என்றும்
ஆனந்தமாய் குடியிருக்கும் உனக்கு
ஆறாத மனதோடு உன் சாந்திக்காய்
ஆராதிக்கும் நின் நிழல் தோழர்கள்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இடைக்காடு, அச்சுவேலி.
நண்பர்கள்.
(53029) (39.21.11.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவரின் பயிருக்காக கவலைப்படும் அரசு தமிழரின் உயிருக்காக கவலைப்படவில்லையே!

## கனடாவில் நடந்த நிகழ்வொன்றில் தொல்.திருமாவளவன் ஆவேசம்

ரொரன்ரோ,ஓக.8



சிங்களவர்களின் பயிர்களுக்காக எவ்வளவோ பெரிதாக கவலைப்படுகின்ற சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் உயிருக்காக சிறிதும் கவலைப்படவில்லை.

கனடாவில் தமிழர்நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இவ்வாறு ஆவேசமாகக் கூறினார், தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல். திருமாவளவன்.

**கனடிய தமிழ் இளையோர் அமைப்பினர்இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு நீண்ட உரையொன்றை ஆற்றினார் திருமாவளவன்.**

அவரது உரையின் சிறுபகுதி வருமாறு:-

தமிழர் நாள் நிகழ்வில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இங்கு திரண்டிருக்கும் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக மாற்றங்களை உருவாக்க, சாதனைகளைப் படைக்க நூறு இளைஞர்கள் வேண்டும் என்றார் விவேகானந்தர். ஆனால், பத்து இளைஞர்கள் போதும் என்று தமது பயணத்தைத் தொடங்கினார் தமிழீழத் தேசியத் தலைவர் அண்ணன் பிரபாகரன்.

அவர் இன்று உலக வல்லரசுகளையே வியப்பில் ஆழ்த்தக் கூடிய வகையில் நமக்கான விடுதலைப் போராட்டத்தை வழிநடத்துகிறார். அந்த மகத்தான தலைவர் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்று பெருமைப்படுவோம்.

விடுதலைப் புலிகள் வலிமையானவர்கள் என்பதை உலக அரங்கிலே மீண்டும் நிலைநாட்டும் வகையில் திருகோணமலையில் சிங்கள இன வெறியர்களைப் பின்னங்கால் பிடரியில் அடிபட பின்வாங்கி ஓடவைத்திருக்கிறார். மாவிலாறுப் பகுதியில் நடந்த போர் மக்கள் தொடுத்த போராகும். சிங்களவர்களின் பயிருக்காகக் கவலைப்படும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களின் உயிருக்காகக் கவலைப்படவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் தமிழர்களுக்குக் குடிதண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை வழங்கவிடாமல் நீண்டகாலமாக சிங்கள இனவெறியர்கள் தடுத்து வந்தனர். அப்பகுதியில் தஞ்சமடைந்துள்ள பல்லாயிரக்கணக்கான தமிழ் அகதிகளுக்கும், சிங்கள ஆட்சியாளர்கள் எந்த உதவிகளையும் செய்யவில்லை. மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் செய்துவந்த உதவிகளையும் தடுத்துவிட்டனர். இந்த நிலையில்தான் தமிழ் மக்கள் ஒன்றுகூடி சிங்கள விவசாயத்திற்குச் சென்ற மாவிலாறு நீரை மறித்தனர்.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த சிங்கள பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம், மறியல் என்று இனவெறியைத் தூண்டினர்.

இந்தச் சூழலில்தான் விடுதலைப் புலிகள் மக்களுக்கு உறுதுணையாகக் களத்தில் இறங்கினர். இதனால் ஆத்திரமடைந்த சிங்கள அதிபர் ராஜபக்ஷ இனிப் பேச்சில்லை. போரைத் தொடங்குவோம் என்று கொழும்பில் கொக்கரித்துள்ளார். அதனடிப்படையில் விமானப்படைத் தாக்குதல் மற்றும் தரைப்படை நகர்வு எனச் சிங்களப் படையினர் வெறியாட்டத்தில் இறங்கினர்.

இந்தநிலையில்தான் சிங்களப் படையினரை விடுதலைப்புலிகள் விரட்டியடித்தனர். ஆயுதங்களை இழந்து, இராணுவ முகாம்களை விட்டு சிங்களப்படையினர் ஓட்டம் பிடித்தனர்.

எத்தனைமுறை அடிவாங்கினாலும் சிங்கள இனவெறியர்களுக்கு புத்தி வருவதில்லை. சிங்கள இராணுவத்தினரை விரட்டியடித்த விடுதலைப் புலிகள் இன்று மீண்டும் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியுள்ளனர். இதன் மூலம் உலக அரங்கில் விடுதலைப் புலிகள் மீதான நன்மதிப்பு உயர்ந்துள்ளது.

கடந்த மாவீரர் நாளின்போது, பொறுமைக்கும், சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லையுண்டு. சிங்களப் படையினரின் வெறியாட்டத்தைத் தொடர்ந்து வேடிக்கை பார்க்க முடியாது. இனியொரு போரைத் தொடங்கினால் அது ஈழத்தை விடுவிக்கும் இறுதிப் போராகவே அமையுமென்று தமிழீழத் தேசியத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறக்கூடாது என்பதனால் பெருந்தன்மையான அணுகுமுறைகளை கையாண்டு வருகிறார். அவர் தலைமையில் தமிழீழம் விரைவில் விடுதலையடையும். அத்தகைய பணியில் ஏதாவதொரு வகையில் நாம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் இடம்பெறவேண்டும். இதுதான் இளைய தலைமுறையினருக்கு நான் விடுக்கும் வேண்டுகோளாகும்'' - என்றார் திருமாவளவன்.

## பேராதனை மருத்துவபீடத்தை மீளத் திறக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஓக.8

கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்ட பேராதனை பல்கலைக் கழகத்தை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச வைத்தியர் சங்கம் பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இப் பல்கலைக்கழகத்தில் ஐந்து புதிய சுகநல பாடங்களைப் போதிப்பதற்கான புதியபீடம் ஒன்றை ஆரம்பிக்குமாறு மாணவர்கள் விடுத்த கோரிக்கை சாதாரணமானது எனவும் அதனை நிறைவேற்ற பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அரச மருத்துவர் சங்கம் கோரியுள்ளது.

இது தவறும் பட்சத்தில் அரச வைத்திய சங்கம் பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் மருத்துவர் சங்கம் எச்சரித்திருக்கிறது.

(த)

## அநுராதபுரத்தில் கிரனேட் மீட்பு

கொழும்பு, ஓக.8

அநுராதபுரம் - விஜயபுர பகுதியில் கடந்த சனிக்கிழமை கிரனேட் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

விஜயபுரப் பகுதியிலுள்ள பொது மக்கள் கொடுத்த தகவலையடுத்தே இக்கிரனேட் மீட்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணையை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

இக்கிரனேட்டை இராணுவ குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினர் செயலிழக்கச் செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த)

## கடத்தப்பட்ட குடும்பஸ்தர் கந்தளாயில் சடலமாக மீட்பு

கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ்.சிறீஸ் கந்தராஜா (வயது - 35) கடந்த சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் நிலையத்திற்கு முன்பாக இருக்கும் தனது தையல் கடையில் வைத்து இவர் அடையாளம் தெரியாதோரால் கடத்தப்பட்டிருந்தார்.

கைகள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் வயல்வெளியிலிருந்து இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

நல்லூர்,ஓக.8

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் 10 ஆவது நாளான இன்று செவ்வாய்க்கிழமை 'தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே' என்ற பொருளில் செஞ்சொற்செல்வன் இரா.கேதீஸ்வரனின் சிறப்புச் சொற்பொழிவும் ஏழாலை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-[illegible])

## ஆடிப் பூரணைவிழா

யாழ்ப்பாணம்,ஓக.8

தாவடி ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்சிரமம், மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையுடன் இணைந்து நடத்தும் ஆடிப்பூரணை விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் செல்வி சி.சிவமலர் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் திருவிளக்குப் பூசை, தீபாராதனை என்பன இடம்பெறும்.

தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றை சித்திரிக்கும் 'எழுந்திரு! விழித்துக்கொள்!' என்னும் பொருளில் அமைந்த கண்காட்சியும் ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரம அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் 'யாருக்கு யார் சொந்தம்' நாடகமும் இடம் பெறும்.

'திருவிளக்குப் பூசையின் மகிமை' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவார். (204)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### 10ஆம் திருவிழா

(மஞ்சம்)



### நல்லூரான் திருவடி - 04



எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி.

- யோகர் சுவாமிகள்.

### மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டு

தஞ்சமென நாடிவந்து திருநல்லூரில் கூடி
விஞ்சுபுகழ் வேலவரை மனமுருகித் தொழுவார்
மஞ்சமதைத் தொட்டிழுக்கும் தொண்டுசெய்து தேவ
குஞ்சரியின் நாயகனை ஏத்திப் போற்றித் தொழுவோம்.

தங்கவொளி வீசுகின்ற மஞ்சமதன் மேலே
எங்கள் குகன் ஏறிவரும் காட்சிதனைக் கண்டே
பண்ணுடனே திருமுறைகள் பாடியேபின் வருவார்
எண்ணமெலாம் பறிகொடுத்து மனமுருகி நிற்போம்.

- கந்த முருகேசதாசனார்.

### மஞ்சத்தில் அலங்கரித்தோம்

*மஞ்சத்தில் உன்னை அலங்கரித்தோம் - முருகா*
*எம் மார்வம் உனக்கும் புரிகிறதா.*
*தேவரும் வந்து வணங்கிடுவர் - உன்*
*அம்மா அப்பா வியந்திடுவர் [மஞ்]*

*செல்லக் குமரன் நல்லூரான் - அவன்*
*செழித்து வளர்வதைப் பார்த்துவிட்டோம்*
*அண்டி அயலவர் பார்த்துவிட - எம்*
*நாட்டின் கொடுமைதான் வேறென்ன.*

*தேவர் வருவதும் அச்சமப்பா - உன்*
*வேலால் கொடுமையை நீக்கிடப்பா*
*முருகா வேலா எனும் நாமம் - அன்பர்*
*மகிழ்வுடன் அழைக்கச் செய்திடப்பா.*

- மலர் சின்னையா

### வேலை நம்பி நாம் வாழ்கின்றோம்

ஐயா! நின் அருள்வேல் செய்த
அற்புதம் அனந்த மென்பர்
பையன் நீ ! எனப் பழிக்க
பாலனாய்ப் பல போர் வென்றாய்
தையலாள் உனை அணைக்க
தந்தைக்கே உபதேசம் செய்தாய்
வையத்தில் தமிழர் நாங்கள்
வருந்தி நின்றழு துகெஞ்சி
பையவே அனாதை களாகி இங்கு
பரிதவித் தலறி ஏங்கி
கையிலே முடிச்சுடனே மெள்ள
க்டல் கடந்துசெல்லக் கண்டாய்
ஐய! நீயும் கை விட்டு விட்டால்
ஆரெமை ஆதரிக்க வல்லார்?
வையகம் உள்ள மட்டும் மண்மேல்
வடிவேலையே நம்பி வாழ்வோம்.

- விகடகவி

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

தங்க நகையுலகில் நம்பிக்கை, நாணயத்துடனான நித்திய சேவையாலும் நியாயமான முறையினாலும் நல்ல நம்பிக்கை பெற்று நகையுலகிலேயே தனியுலகுபடைத்து நிற்கும்:

நித்தியகல்யாணி நகை மாளிகை

205/4, கஸ்தூரியார் வீதி,
ராஜா கட்டடத் தொகுதி,
யாழ்ப்பாணம்.

(சி/50025)

T.P.: 021 4590214
0777111415

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய

## தேர்த்திருவிழாச் சிறப்புமலர் - 08★08★2006

### பிரதம குருக்களின் ஆசி

வடமராட்சிப் பதியில் அல்வாய் வேவிலந்தை முத்து மாரி அன்னைக்குப் புனராவர்த்தன பிரதிஷ்ட மகா கும்பாபி ஷேகம் நிறைவு பெற்றதுடன், பிரம்மோற்சவம் ஆரம்பமாகி பஞ்சகிருத்தியங்களில் அங்கமாக விளங்கும் தேர்த்திருவிழா வாகிய இன்றையதினம் அன்னை நவகோண சித்திரத் தேரிலே ஆறாவது வருடமாக ஆரோகணித்து தீயவற்றைக் களைந்து நல்லருள் பாலிப்பதற்காக வீதிவலம் வரும் கண் கொள்ளாக் காட்சியைப் பார்த்தவர்களும், நினைப்பவர் களும், கேட்பவர்களும் அவளுடைய கடைக்கண் பார்வை யினால் பதினாறு பேறுகளும் பெற்று பெருவாழ்வு வாழ் வதற்கும் நாட்டில் சாந்தியும் சமாதானமும் சுபீட்சமான வாழ்வும் கிடைக்க அன்னை ஆதி பராசக்தி முத்துமாரி தாயின் பாதக்கமலங்களை மனக்கண் இருத்தி ஆசிகூறு கின்றேன்.

'சர்வே ஜனகா சுகினோபவந்தோ'

சிவாகம கிரியாநிதி சக்தி ஆகம வித்வசிரோமணி கிரியா பூஷணம்
**பிரம்மஸ்ரீ சதாசிவ சுரேஸ்வரக்குருக்கள்.**

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துரை

அல்வையம்பதியில் அமர்ந்திருந்து அருள் மழை பொழி பவள் எம் அன்னை முத்துமாரி. வேண்டுவார் வேண்டுத லுக்கு ஈந்து வேதனை தீர்ப்பவள் வேவிலந்தையாள். அடியவர்கள் அன்னையின் பக்தி மேலீட்டினால் காலத்திற் குக் காலம் அம்பாளின் ஆலயத்தை மெருகூட்டி புதுப் பொலிவுடன் முத்துமாரி வீற்றிருந்து அருள்புரிய பணிகள் பல செய்து மனம் பூரிக்கின்றனர். மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன ஒருங்கே அமைந்த சக்தி ஆலயங்களில் வடமராட்சியில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குவது அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகும்.

இன்று எம் ஆலயத்தில் இராஜகோபுரம், மணிமண்டபம், வசந்தமண்டபம், பூங்காவனம் யாவும் புதுப்பொலிவு பெற்று தெய்வீக உணர்வு மிளிர்கின்ற வேளையில், ஆன் மாக்களின் ஆணவ மலங்களை அழித்தற் பொருட்டு அன்னை சித்திரத் தேரேறி வீதி உலா வருகின்றாள். கருணைக் கட லான அம்பிகையின் அருளால் நாட்டில் அமைதியும், ஒற்றுமையும் ஏற்பட்டு, கல்வியும் செல்வமும் ஒழுக்கமும் உயர்ந்தோங்க எல்லாம்வல்ல சக்தியின் அருள் வேண்டி நின்றும் இருந்தும் கிடந்தும் அடியார்கள் ஒன்றுபட்டு வழி பட்டு உய்வோமாக.

அருளாட்சி பெற்று மகிழ்வுடன் விளங்கும் அன்னைக்கு 08.06.2006இல் நடந்தேறிய மகா கும்பாபிஷேகத்தின் சிறப் பம்சமாக கும்பாபிஷேக மலரை வெளியிட அடியார்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு உருவாக்கிய மலரை இன்று தேர்த்திருவிழாவில் வெளியிடுவதனையிட்டு பூரிப்படை கின்றேன். அம்பிகையின் அடியார்கள் அனைவரும் மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்து சிறப்பித்து மலரைப் பெற் றேகுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

**சி.கணேசமூர்த்தி,**
தலைவர்,
பரிபாலன சபை, திருப்பணிச்சபை.

## தேரேறி வருகிறாள் தேவி



இந்த உலகத்திற்கு எல்லாம் நாயகியாக விளங்கும் முத்துமாரி யின் பேரருள் பேசுவதற்கு மிக உயரியதாகும். உள்ளத்தில் அவளை நினைத்து செய்யும் பணிகள் செம்மையாக நிறை வேறும். அன்னை முத்துமாரியின் அருளை அறியாதவர் யாரு மிலர். தன்னைச் சரண் புகுந்தோரைக் காக்கும் தாய் அவள். மக் கள் பிணிகளைத் தீர்க்கும் அருமருந்து. வெம்மை தணிக்கும் மாரி. அழகுக்கெல்லாம் பேரழகாய் விளங்கும் பெருந்தெய்வம். அவளைக் குலதெய்வமாய்க் கொண்டாடி வாழ்பவர்கள் பிணி யின்றி பெருநலத்தோடு வாழ்வர்.

இத்தகைய அன்னை இன்று தேரேறி வலம் வருகிறாள். எமது கோயில் வழிபாட்டு மரபிலே தேர்த்திருவிழா ஒரு முக்கியமான திருவிழாவாகும். பழைய கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் 10ஆம், 11ஆம் நூற்றாண்டிலிருந்து கோயில்களில் தேர்த்திருவிழாக்கள் நடைபெறுவதைக் குறிப்பிட்டுள்ளன. இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்டுள்ள எமது சமூகத் தவர்கள் அல்வாய் வேவிலந்தைப்பதியில் அமர்ந்தருளும் முத்துமாரி அம்பாளுக்கு 2001 ஆம் ஆண்டு அழகான சித் திரத்தேர் ஒன்றைச் செய்து அதில் எழுந்தருளி காட்சி கொடுக்கும்போது அவள் அருள் பெறுவர். அவ்வகையில் 2001 ஆம் ஆண்டிலிருந்து சித்திரத்தேரில் எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் இன்று தேரேறி வந்து அடியவர்களுக்கு காட்சி நல்கி வேண்டும் வரம் அருளும் நன்னாளாகும். இன்று முத்துமாரி அம்மனுக்காக பல அடியவர்கள் நேர்த்திகளை நிறைவேற்றி வேண்டும் வரம் பெறுவர். காவடி, கரகம், அங்கப்பிரதட்சணம் என நூற்றுக்கணக்கான அடியவர்கள் அன்னையிடம் வரம் வேண்டும் நன்னாள் இன்றாகும்.

ஆலயங்களில் நடைபெறும் மகோற்சவங்கள் பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கின்றன. இதில் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. அழித்தல் என்பது ஆன்மாக்களிடம் உள்ள மலங்களை அழித்தலாகும். மல பந்தத்தில் மூழ்கியிருக்கும் ஆன்மாக்களுக்கு இறைவி தேரேறி வந்து நயன தீட்சையால் மலபந்தம் அறுத்து உய் விக்கும் நன்னாள் இன்றைய தேர்த்திருவிழாவாகும்.

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்பு உடைச்சி என்ற அம்மையின் கனவில் தோன்றி தனது வேம்பும் இலந்தை யும் இணைந்த இடத்தில் இருப்பிடத்தைக் குறிப்பிட்டு விரும்பி முத்துமாரித்தாய் அமர்ந்த இடம் அல்வாய் வேவி லந்தை முத்துமாரி ஆலயமாகும். கொட்டிலாக இருந்த இந்த ஆலயம் இன்று அழகுமிகு இராஜகோபுரம், மணி மண்டபம், பூங்காவன மண்டபம் என்பவற்றைக் கொண்டு கைலைக் காட்சியாக காட்சியளிக்கும் சூழலில் தற்போது திருமணமண்டபம், அன்னதான மண்டபம் என்பவற்றை யும் கொண்டு ஆன்மீகச் சூழல் சூழ்ந்த பிரதேசமாக விளங்கு கின்றது. இவ்வாலயத்தில் செவ்வாய் தோறும் நூற்றுக் கணக்கான பெண் அடியவர்கள் வழிபட்டு இஷ்ட சித்தி களைப் பெறுவர்.

சக்தி விரத காலங்கள் எல்லாம் இவ்வாலயம் திருவிழாக் கோலம் கொள்ளும். இங்கு செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறும் சிறப்பு பூஜை, பூரணை தினங்களில் சக்கர பூஜை, தைமாத அபிராமிப்பட்டர் விழா, கேதார கௌரி விர தம், நவராத்திரி விரதம் என்ற எல்லாக் காலங்களும் முத்து மாரி அம்மன் அடியவர்களுக்கு அருளை வாரி வழங்கும் பெருவிழாக் காலங்களாகும்.

அம்மனின் அருளாட்சி நிறைவுற்று விளங்கும் தன் மையை இங்கு வழிபடும் அடியவர்கள் உள்ளத்தால் உணர் வர். இவ்வாறு அடியவர்களுக்கு உளப்பிணி, உடல்பிணி நீக்கும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் இன்று தேரேறி வருகிறாள். தேரின் வடம்பிடித்து அடியவர்கள் வானத்தில் இடம் பிடிக்கும் நன்னாள் இன்றாகும். நாமும் அவளருளைப் பெறுவேமாக.

**ஆ.சிவநாதன்**
ஆசிரியர்.

### சித்திரத்தேரேறி சீர்பெருக வருமழகி

பிறையணி பித்தனும் உமையருகிலமர்
பிடியதன் தும்பியுமவன் மடிதனில்
பித்தனுக்குருவான வேலவளருகிலமர்ந்தே
பிறையென ஒளி வீசிய குண்டலமணி அம்மையே
- சரண்

அல்வையிலே அம்மையாக வந்தழகி
அருள் சுரக்கும் ஆனந்தக் கவியழகி
கார் குழலுடை சடையழகி
காந்தமெனக் கவரும் கண்ணழகி
செவ்வாழை நிறமுடைய உதட்டழகி
சீர்பொலியும் சிரிப்பழகி
சிற்றிடையோர் மெய்யழகி
சிங்கார சிற்பம் கொண்ட தேரழகி.

பிறை கொண்ட நாயகன் துணையழகி
பிள்ளையென வேழமதின் தாயழகி
பாருக்கு பெருமை சேர் பெண்ணழகி
பாவியெனக்கு பாவான சொல்லழகி
சுந்தரத் தமிழின் சொல் கொண்ட பேரழகி
சுதியோடு கவிபாட பண்ணழகி
சித்திரத் தேரேறி சிறப்பாக வருமழகி
சீர் பெருக நவமெல்லாம் தருமழகி.

அல்லையூர் யோகி **த.யோகநாதன்**

## தொடர்ந்து நின்ற தாய்....

இறைவன், அடியார்களின் வாக்கில் நின்று பேசச்செய் பவன் மனத்தில் நின்று நினைக்கச்செய்பவன், நினைப்பில் நின்று முயலச் செய்பவன், முயற்சியில் நின்று கருதிய காரி யம் கைகூடச் செய்பவன், தூய நற்பாங்கு உடையவன், வெள்ளை ஏற்றை உடையவன், சுடர்விட்டு ஒளிவீசும் சடையில் திங்களைச் சூடியவன். இப்பிறவிக்கு மட்டு மன்றி, பிறவிதோறும் தொடர்ந்து தாயாகி இருப்பவன். தவநெறியாய் விளக்குபவன். விண்ணோராலும் அறிதற்கு அரியவன் அடியார்களுக்கு எளியவன். அவனை திருவால வாயிலிலே கண்டு நான் சிந்தனை செய்யப்பெற்றேன்.

இது தாண்டகவேந்தர், திருநாவுக்கரசரின் முற்றிய அனுபவப் பாடல். ஆறாம் திருமுறையில் அடங்கும் இவ ரின் பாடல்கள் கருத்துச்செறிவுடையன. இறைவன் எம்மை விட்டுப்பிரியாமல் என்றும் எம்முடன் இருக்கின் றான். உயிர் நம்மை இயக்க உயிரை இறைவன் இயக்கு கின்றான்.

''என்னை அறியாமல் எனக்குள்ளே நீயிருக்க
உன்னை அறியாமல் செயலிழந்தேன் பூரணமே''

என்கிறார் பட்டினத்தடிகள். நீர், நிலம், நெருப்பு, காற்று என்பன பெற்றுள்ள வலிமை எல்லாம் இறைவனுடை யதே என்று உமையவள் இந்திரனுக்குக் கூறினாள். நமது குறிக்கோள் (முத்தி) நிறைவுபெறும்வரை எம்முடன் கூட இருப்பவன் அவனே. ''புறம்புறம் திரிந்த செல்வமே'' என் றார் மணிவாசகர். நம்மைத் தனிக்கவிடமாட்டான். சிற்ற றிவு நீங்கிப் பேரறிவு தோன்ற நம்முன் வெளிப்படை யாகத் தோன்றுவான். அதுவரை விறகில்தீயாகவும் பாலில் நெய்யாகவும் மாமணிச் சோதியாகவும் தொடர்ந்து நிற் பான்.

முத்திக்கு வழி பக்தி என்பது அன்பு அன்பின் இருப் பிடம் தாய். இந்துமதம் இறைவனைப் பல உறவுமுறை கொண்டு அழைத்தாலும் தாயே மேலானதாக எடுத்தாளப் படுகிறது. ''பால்நினைந்தூட்டும் தாய்'', ''அம்மையே அப்பா'', ''ஈன்றாளுமாய்'' ''எந்தாயும் எனக்கருள் தந்தை யும் நீ'' என்பன போன்ற சொற்றொடர்கள் தாயின் சிறப் பைக் காட்டுகின்றன. ''தாயிற்சிறந்த தயாவான தத்து வனே'' என்றார் மணிவாசகர். எல்லோருக்கும் அம்பி கையே தாய். எமை ஈன்றெடுத்த தாய்க்கும் தாய் அவள் தான். உலகம் பதினான்கையும் பூத்துக், காய்த்து, காப் பவள் அன்னை அபிராமியே!

இவ்வுலகில் எமையீன்றதாய் மறுபிறயில் இன்னொரு தாய்க்கு மகளாகப் பிறக்கின்றாள். ''எனக்குத் தாயாகியாள் எனை யீங்கு இட்டுத் தனக்குத் தாய்நாடியே சென்றாள்'' என்பது நாலடி யார். நாம் எடுத்த எடுக்கப்போகும் பிறவிகள் அளப்பில.

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
மாதா உடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
முன்னை எத்தனை ஜென்மமோ இன்னும் எத்தனை ஜென் மமோ'' என்பது பட்டினத்தார் கூற்று.

மரணமிலாப் பெருவாழ்வு அடைவதே நமது குறிக்கோள். நமது பிறவி அறவேண்டும் என்பதே பல்லோர் கருத்தாகும். எண்ணத்தின் தூல அமைப்போ பிறவிக்குக் காரணம். எவன் எதை நினைக்கின்றோனோ அவன் அவ்வண்ணமேயாகிறான் என்பர். நீயே உன்பிறவிக்குக் காரணம் என்பார் இராமகிருஷ்ணன். கன்மம், பிறவிக்கோட்பாடு இந்துமதத்தின் அசையாத கோட்பாடு. இறைவன் கருணை நிறைந்தவன். ஆளுக்காள் வேறுபாடு காட் டாதவன். விருப்பு, வெறுப்பு அற்றவன்.

இறைவன் ஒருவன். ஆண்மை - பெண்மை இரண்டும் கலந்த அர்த்தநாரீஸ்வரன். ''எத்திறம் ஈசன் நின்றான் அத்திறம் அவளும் நிற்பாள்'' ''சி'' என்பது சிவம். ''வ'' என்பது சக்தி. சிவம் எனும் போது இருமையில் ஒருமையான நிலையே தோன்றுகின்றது. தொடர்ந்து ''நின்றதாயானை'' என்று பாடிய நாவரசர் சிவனை விட்டுச் சக்தியைப் பாடினார் என்பது கருத்தல்ல - உற்பத்திக் கிராமத்தில் சக்தி தத்துவத்திலிருந்தே சிவதத்துவம் தோன்றிற்று. நமக்கும் நமது தாய்க்கும் உள்ள அன்பு இவ்வுலகுடன் அறுந்து விடுகின்றது. இழந்தால் மீண்டும் பெறமுடியாதது. அன்னை பராசக்திக்கும் நமக்கும் உள்ள உறவு அறுந்துவிடாது என்றும் தொடரும். தன்குழந்தையிடம் எவ்வளவு அன்புகொண்ட தாயா னாலும் எப்போதுமே அந்தக் குழந்தையுடன் இருக்கமுடியாது. தன் ஆயுள்காலம் முடியப் பிரிந்து விடுகிறாள். ஆனால், எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் உயிர்களோடு பிரியாது தொடர்ந்து நிற்கும் தாய் இறைவனேயாவான்.

நமது வாழ்வு ஒரு யாத்திரையாகும். நாம் என்றும் அழிய மாட்டோம். ஐம்பூத சேர்க்கையால் உண்டான உடம்பே அழியும். இறைபதம் அடையும்வரை பிறவிகள் பல பெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். ''புல்லாகிப் பூடாய் புழுவாய்...'' என்று சிவ புராணம் நாம் எடுக்கும் பிறவிகள் தோறும் எம்தாய் என்னைத் தொடர்ந்து வருவாள். நமது துணையும் தொழுந்தெய்வமும் அவளே.

நீர்க்குமிழ் போல நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு மிகக்கீழானது ''என்று நீ அன்று நான்'' என என்னுடன் தொடர்ந்து நிற்பவள் அன்னை அபிராமி. பிறவிகள் தோறும் சிறிது சிறிதாக நம்மைப் பக்குவப்படுத்தி இறுதியிலேயே மோட்சம் தரும் கருத்துடனேயே அவள் தொடர்ந்து நிற் கின்றாள். சிவம் நிர்விகாரியாய் இருக்க சிவசக்தியே எல்லாவற்றையும்நிகழ்த்தும் என்பது சைவசித்தாந்த நூற்றுணிபு. ஆதலினாலேயே தொடர்ந்து நின்று யாவை யும் நிகழ்த்துபவள் தாயே யாம் - அவள் எனைத் தொடர்ந்து நிற்பது போலவே ''நானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே. என்பது திரு வாசகம். எமக்கு வீடு இவ்வுடலன்று. அவளது கழலேயா கும். அதனை அடையும் முயற்சியில் ஈடுபடும்போது எத் தனையோ இடர்பாடுகள் வரும். இதனை வராது தடுப் பவள் அவள். எனவேதான், நமைத் தொடர்ந்து நிற்கின் றாள்.

''எமக்கென்ன மனக்கவலை என்தாய்க்கன்றோ தினம் தினம் என்கவலை'' - என்பது வள்ளலார் வாக்கு.

**க.கிருஷ்ணகுமார்**
ஆசிரியர்(Dip. in Edu)
**நெல்லியடி மத்திய ம.வித்தி.**

### அருள் மழை பொழிந்திடம்மா

ராகம்: ஆரவி தாளம்: ஏக

பல்லவி

வேம்பிலந்தை நிழலினிலும் இலுப்பை இத்தி ஆலரசும்
வீசுகின்ற தென்றலிலும் அல்வை முத்துமாரியம்மா - (வேம்பில)

அனுபல்லவி

அம்பிகையே வேண்டியுனை அருள்சொரியப் பாடுகிறேன்
நம்பினோர்க் கடியவளே நாடியேமைக் காத்திடம்மா - (வேம்பில)

சரணம்

வேவிலந்தைப் பதியமர்ந்து வெவ்வினையைத் தீர்ப்பதற்கு
வீரசிங்க மீதேறி வினையகற்ற தேர் மீது
வேப்பிலையைக் கைப்பிடித்து வீதிவலம் மாரியம்மா
வடம்பிடித்து நாமிருக்கவாறாள் முத்துமாரியம்மா - (வேம்பில)

மாளாமகிடன் தலையை வாளால் வெட்டி வென்றவளே
நீலநிற மாயனுக்கு நிறைவான சோதரியே
ஆளவந்த அரக்கருக்கு அறிவுரையைப் புகட்டிடம்மா
அகிம்சைதனை நாடிவர அருள்மழையைப் பொழிந்திடம்மா
- (வேம்பில)

(சி/50692)(24-11-15) **- திக்க மருதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்காத கழிவை உரியமுறையில் அகற்றி மண்வளம், நீர்வளத்தைப் பேணுவோம்

## பூநகரி பிரதேச சுகாதார சேவையினர் அழைப்பு

பூநகரி,ஓக.8

மண்வளம், நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கு உரியமுறைகளில் பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரித்து அகற்றவேண்டும் என்று தமிழீழ சுகாதார சேவையினரின் பூநக ரிப் பிரதேச பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு மாதமாக ஓகஸ்ட் மாதம் பிரகடனப்படுத்தப்பட்டமையை யடுத்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளனர்.

செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:-

பொலித்தீன் கழிவுகளை முற்றாக அழிப் பதன் மூலம் சூழலைப் பேணுவோம்.

அரச, அரசசார்பற்ற நிறுவன ஊழியர் கள், உத்தியோகத்தர் அனைவரும் சிரமதா னங்கள் மூலம் நிறுவனங்களை அண்மித்த பகுதிகளிலுள்ள உக்க முடியாத கழிவுகளான பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்றவற்றை சேக ரித்து அகற்றவேண்டும்.

நீர்வளம் பாதிக்காதவகையிலும், மண்வளம் குன்றிப்போகாதிருக்கவும், தொற்று நோய் கள் ஏற்படாதிருக்கவும் எம்மால் மேற்கொள் ளப்படும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கறுப்பு, நீல நிறப் பைகளில் கழிவுகளை சேக ரித்து அவற்றை உரிய முறையில் அகற்று வதற்கு உதவவேண்டும் - என்றுள்ளது.

(203-403)



ஒக்ஸ்பாம் நிறுவனத்தினரால் அண்மையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட முத லுதவிப் பயிற்சியின் நிறைவு நிகழ்வுகளின் போது முதலுதவிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணைத் தலைவர் கணேசபிள்ளை முன்பள்ளி ஆசிரியர் ஒருவ ருக்கு முதலுதவிப் பெட்டியை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

*(படம் : திருவையாறு செய்தியாளர்)*

## சுற்றுச் சூழல் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஓக.8

பரந்தன் பொதுச்சந்தை, ஏ9 பிரதான வீதி ஆகியன சூழல் மேம்பாட்டு மாதத்தை முன் னிட்டு சிரமாதானம் மூலம் துப்புரவு செய் யப்பட்டுள்ளன.

தமிழீழ சுகாதார சேவையினர், அரசியல் துறையினர், கண்டாவளை சுகாதார வைத் திய அதிகாரி பிரிவினர் ஆகியோர் இணைந்து அப்பகுதி வர்த்தகர்கள் மூலம் சிரமதா னத்தை மேற்கொண்டனர்.

தொடர்ந்து சிரமதானத்தில் ஈடுபட்ட வர்களுக்கு சூழல் மேம்பாடு தொடர்பான கருத்தூட்டல்கள் வழங்கப்பட்டன. (203)

* * *

பூநகரி,ஓக.8

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் வன்னியில் பல்வேறு இடங் களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் கருத்தூட் டல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (203-403)

## ஈட்டிமுறிச்சான் கிராம மக்கள் அடிப்படை வசதிகளின்றி சிரமம்

புளியங்குளம்,ஓக.8

வவுனியா வடக்கு ஈட்டிமுறிச்சான் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் ஏதுமின்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின் றனர்.

இக்கிராமத்தில் 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றனர். இந் நிலையில் இவர்களுக்கு அடிப்படை வசதி கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் அவர்கள் கஷ்டமடைந்து வருகின்றனர்.

தற்காலிக வீடுகளில் குடியிருக்கும் இக் கிராம மக்களின் வீடுகள் கூட உரிய முறை யில் உரிய காலத்தில் வேயப்படாத நிலை யில் உள்ளது. இதனால் இனிவரும் மழை காலத்தில் இக்கிராமத்தில் குடியிருக்க முடி யாத நிலையே ஏற்படும்.

இக்கிராமத்தில் தண்ணீரைப் பெறுவதற்கு ஒரு கிணறு கூட இல்லை. சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் சென்றுதான் இவர் கள் தண்ணீரைப் பெற்றுவருகின்றனர்.

இதேவேளை - மலசலகூட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் இவர்கள் பொருளாதார ரீதியாகவும் கஷ்டமடைந்துள்ளனர்.

இக்கிராமமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் உதவ முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ள னர். (203-355)

## நீரும் சுகாதாரமும் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் 399 கிணறுகள்

கிளிநொச்சி,ஓக.8

வடமராட்சி கிழக்கில் நீரும் சுகாதாரமும் என்னும் திட்டத்தின் கீழ் 399 கிணறுகளும் மலசலகூடங்களும் அமைத்துக்கொடுக்கப் படவுள்ளன.

இதற்கான ஆரம்ப அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை வத்திராயன் புதிய கிரா மத்தில் ஊரகமேம்பாட்டுத் தலைவர் சிறி ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

சீடொட், ஒக்ஸ்பாம் நிறுவனங்கள் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத் தப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் முதல் கிணற்றுக்கான அடிக்கல்லை ஒக்ஸ்பாம் பொறியியலாளர் குலாஸ், சீடொட் தலைவர் செல்வநாயகம், சுனாமி மீள்கட்டுமானத் திட்டமிடல் செய லகப் பணிப்பாளர் பாலையா, வத்திராயன் கிராம அலுவலர் மதனசேகரம் உட்படப் பலர் அடிக்கல் நட்டுவைத்தனர்.

தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற் றன. (203)



முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் டிப்ளோமா பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர் க.சரவணபவன் ஆகியோரை விரிவுரையாளர்கள் அழைத்து வருவதையும் பட்டமளிப்பில் கலந்துகொண்ட மாணவர்க ளில் ஒரு பகுதியினரையும் விரிவுரையாளர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

## சத்திரசிகிச்சைப் பயிற்சி நிறைவு

தமிழீழ சுகாதார சேவையினரால் சத்திரசிகிச் சைக்கூட பயிற்சி வழங்கப்பட்ட முதற் தொகுதி தாதிய உதவியாளர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு அண்மையில் கிளி நொச்சியில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் நிறைவில் தாதிய உதவியாளர்களுக்கு அடை யாள அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவை களின் மருத்துவர்களான ஓவியன், கலை, கதிர், வாமன், தேவா, வான்மதி, விஜயசாந்தி, சுதர்சன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (203)

## கோரக்கன்கட்டுக் கிராமத்தில் போசாக்குப் பூங்கா திறக்கப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச கோரக்கன்கட்டு கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியுடன் அமைக் கப்பட்ட புலேந்திரன் போசாக்கு பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீள் குடியேற்றத் திட்டப்பிரிவின் இணைப்பாளர் ஏ.ராஜன் தலைமையில் கடந்த இரண்டாம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் போசாக்கு பூங்காவின் பெயர்ப்பலகையை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வாமன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பிரதான கட்டடத்தை அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து சிறுவர்களின் விளையாட்டு முற்றத்தை கண்டாவளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் சத்திய சீலன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

சிறப்புரையை அரசியல்துறைப் பொறுப் பாளர் சோ.தங்கன் நிகழ்த்தினார்.

கோரக்கன் கட்டு கிராம மக்கள் கூலித் தொழிலையே மூலதனமாகக் கொண்டு தமது அன்றாட ஜீவனோபாயத்தை நடத்தி வரு கின்றனர்.

வன்னிச் செய்திகள்

இவர்கள் சமூக, பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர்.

ஆனையிறவுப் படைத்தளம் விடுவிக்கப் பட்டதை அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதிப் பங்களிப்புடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இக்கிராமத்தை அபிவிருத்தி செய்துவருகின்றனர்.

(203-307)

## வன்னேரிக் குளம் மத்திய மருந்தகத்தில் மூன்று மாதங்களாக வைத்தியர் இல்லை!

### மருத்துவ வசதி இன்றி மக்கள் அவலம்

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்ட வன்னேரிக்குளம் மத்திய மருந்தகத்தில் வைத் தியர் இல்லாமையால் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பெரும் அவலங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்படி மத்திய மருந்தகத்தில் கடந்த மூன்று மாதங்களாக வைத்தியர் எவரும் இல்லாதநிலையில் பணியாளர்கள் மட்டுமே அங்கு வந்துசெல்கின்றனர்.

வைத்தியசாலையில் வைத்தியர் இன்மை யினால் நோயாளர்களுக்கு மருந்து வழங்கப் படமாட்டாது என ஓர் அறிவித்தல் அங்கு போடப் பட்டுள்ளது.

இம்மருந்தகத்தினை நம்பி இப்பிரதேச சபைக்கு உட்பட்ட ஆனைவிழுந்தான், ஐய னார்புரம், வன்னேரிக்குளம், திக்காய், குஞ் சுக்குளம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 மேற்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் தமது மருத்துவ தேவையினைப் பூர்த்திசெய்யமுடியாது பெரும் கஷ்டங் களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இம்மத்திய மருந்தகத்திற்கு விரைவில் ஒரு வைத்தியரை நியமித்து மக்களின் அசௌ கரியங்களைப் போக்க உதவுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (203-352)

## கட்டாக்காலி மாடுகளால் முல்லைத்தீவில் தொல்லை

பரந்தன்,ஓக.8

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட பல பகுதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றமை யால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேற்படி மாவட்டத்திற்கு உட்பட்ட புதுக் குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, முள்ளி வாய்க்கால், குமுழமுனை போன்ற பகுதிகளில் பெருமளவான கட்டாக்காலி மாடுகள் பிரதான வீதிகள் மற்றும் பொது இடங்களில் கூட்டம் கூட்டமாக இரவு பகல் வேளைகளில் நடமாடுகின்றன. அதுமட்டு [illegible] வீதிகளில் கிடப்பதாலும் [illegible]க்கள் எற்படும் நிலைமையும் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை -

பல விவசாயிகளின் வயல் நிலங்கள், வீட்டுத் தோட்டச் செய்கைகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் என்பனவற்றைக் கட்டாக்காலி கள் அழித்துவருகின்றன.

கட்டாக்காலி மாடுகள் பிரதான வீதி களில் பெருமளவாகப் படுப்பதால் இம் மாடுகளின் கழிவுகளால் அந்த இடங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்தி லெடுத்து மக்களின் அசௌகரியங்களைப் போக்க முன்வரவேண்டுமென மக்கள் கேட் டுள்ளனர். (203-352)


உங்கள் விமானப் பயணத்திற்கு

Aero Lanka

In Domestic Operation

Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626

Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519

Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600

Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979

New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
24
04
1962



மறைவு
30
06
2006

### அமரர் கணேசபிள்ளை ஜெயசிங்கம்

(பழனி- *அரியாலை*)

*அன்பாக நீயிருந்து அரவணைப்பாய் என நாம் நினைக்க*
*எங்குதான் சென்றாய் எம்மிடம் ஏதும் கூறாமல்*
*பல கனவு நாம் கண்டு பழனியே நாம் இருக்க*
*பாவி எம்மைத் தவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தாயோ?*

30.06.2006 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் சிவபதமடைந்த எமது அன்பு மகன் அமரர் கணேசபிள்ளை ஜெயசிங்கம் (பழனி) அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (09.08.2006) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**35, வைரவர் கோயில் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**- குடும்பத்தினர்.**

(52977) (39-14-11-32)

### வரணிப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி

பருத்தித்துறை கொடிகாமம் பிரதான வீதியின் கிழக்கே வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயப் பகுதியில் இருந்து வரணி மகாவித்தியாலயம் வரையிலான பிரதேசத்தில் தற்சமயம் மிதிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

'ஹலோரஸ்ட்' நிறுவனம் தமது பணியாளர்கள் மூலம் இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

முன்னர் இப்பிரதேசத்தில் படைத்தரப்பினரால் அமைக்கப்பட்ட தொடர் மண் அணைப் பகுதியிலேயே மிதிவெடிகள் அதிகம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(1-122)

### கௌரவிப்பு விழா

வடமராட்சி,ஓக.8

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்ட கௌரவிப்பு விழா நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரவெட்டி கொடிகாமம் வீதியிலுள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்க மண்டபத்தில் அதன் தலைவர் வண.பிதா.டேவிட் அழகராஜா தலைமையில் நடைபெறும்.

(1-173)

உ

### மிருசுவில் படித்த மகளிர் திட்டம்- துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

*அலங்கார உற்சவம் நிகழும் விய வருடம் ஆடி மாதம் 15 ஆம் திகதி (31.07.2006) திங்கட்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை (09.08.2006) இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறுகின்றன.*

*9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஞானதுர்க்கா தேவியின் தெய்விக அருட்கலையுடன் சுவிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியின் வீதியுலாவுடன் சேர்ந்து வீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும். தினந்தோறும் காலை 10 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூஜை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும் நடைபெறும். வழமை போல் இ.போ.ச. போக்குவரத்துகள் நடைபெறும்.*

**பரிபாலன சபை,**
**துர்க்காபுரம் ப.ம.திட்டம்,**
**மிருசுவில்.**

ஆலய தர்மகர்த்தா
*சிவத்திரு.சி.நவரத்தின ஐயா.*

*(52959) (39-19-14)*

## Acknowledgement



I seek to thank and praise our Lord and saviour Jesus Christ on my father **Mr.S.R.Jesupalan J.P** reaching his 60th year in his life having undergone a heart surgery on the 4th of October 2005 and subsequent surgeries.

I also express my sincere thanks to the Surgeon, his assistants, Consultants, ward Doctors, Physiotherapists, Sister Nurses, Nurses and other staff of the Durdans Heart Surgical Centre (PVT) Ltd Colombo 3, who attended on him for their skilled and dedicated service which enabled him to pull through.

My thanks go to those who were of great assistance to him financially physically and those who donated blood.


I also express my thanks to those who Prayed for him and visited him in Colombo and his return to his loving land.

May the good Lord bless you all.

(53027)

**T.P.: 021 4591351** **Mrs.C.Thamari Joe Inparaj.**

## ஆண்டு ஒன்று ஆகியும் ஆறாத் துயரம்மா!



### செல்வி கீர்த்தனா வாமதேவன்

(A/L 2007, கணிதப் பிரிவு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

மலர்வு - 13.12.1988 உதிர்வு - 08.08.2005

காலையில் படுக்கை விட்டு
கண்விழித் தெழுந்த நேரத்தில்
இடியெனச் செய்தி வந்து
ஓராண்டு ஆகி விட்டதா?

கற்பனையால் நீராட்டி கனவில்
உடை உடுத்து மகிழ்ந்த வேளையில்
கண்ணீரே உங்களுக்கு என்று
சொந்த ஊர் சென்று விட்டாய்!

கீதையின் உட்பொருளை இயம்ப வல்லவன் யார்?
ஆன்மாவின் தந்திரம் ஆண்டவனுக்கு வெளிச்சம்
உன் ஆத்மா இறையோடு இருக்கும்
தெய்வமாய் நீ எம்முடன் இருப்பாய்!

**ச.வாமதேவன்**
(அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்)

*உன் பிரிவால் வாடும்:*
**பெற்றோர்,**
**அன்புத் தங்கை,**
**உறவினர்கள்.**

**இல.109, பொற்பதி வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

(53011) (39-14-11-32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிக்குத் திரும்புகின்றார் அத்தப்பத்து

# ஆரம்பத் துடுப்பாளராக அவர் இல்லை!



கொழும்பு, ஓக.8

காயங்களில் இருந்து மீண்டுள்ள இலங்கைக் கிரிக்கெட் அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து மீண்டும் களமிறங்கத் தயாராகிவிட்டார். வரவிருக்கும் முத்தரப்புத் தொடருக்கான ஒருநாள் அணியில் அவரது பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் அவர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்க மாட்டார் என்று தெரிகின்றது.

தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் இலங்கை அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடர் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான 15 பேர் கொண்ட உத்தேச அணி அறிவிக்கப்பட்டது.

35 வயதான மாவன் அத்தப்பத்து, அவரது முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக இங்கிலாந்து தொடரில் இருந்து விலகினார். பின்னர் அவர் ஆஸ்திரேலியாவில் தனது காயத்திற்குச் சிகிச்சை செய்துகொண்டார். தற்போது நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடருக்கான 20 பேர் கொண்ட அணியிலும் அவர் சேர்க்கப்பட்டார். எனினும் இறுதியில் அணியில் அவர் இடம்பெறவில்லை.

அத்தப்பத்துவின் உடல்தகுதி குறித்து அணியின் உடற்கூற்று நிபுணர் சாதகமான பதிலை வழங்கியதை அடுத்தே அவர் உத்தேச அணியில் இணைக்கப்பட்டுள்ளார். அணித்தேர்வுக்குழு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்துள்ளன. '' உலகக்கிண்ண ஆட்டங்களில் மாவன் அத்தப்பத்துவைச் சேர்த்துக் கொள்வதாக இருந்தால், அவர் இப்போதே தனது பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.''- என்று தெரிவித்தார் தேர்வுக் குழு உறுப்பினர்.

ஒருநாள் அணிக்கான 11 பேர்களுக்குள் அத்தப்பத்து சேர்த்துக் கொள்ளப்பட்டாலும் அவர் ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறக்கப்பட்டமாட்டார் என்று தெரிவுக்குழு வட்டாரங்கள் மேலும் உறுதிப்படுத்தின.

''பவர் பிளே முறையில் வெற்றிகரமாக ஆடி வரும் தற்போதைய ஆரம்பத் துடுப்பாளர் ஜோடியில் (ஜெயசூரிய - தரங்க) மாற்றம் செய்து குளறுபடிகளை ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. மஹேல ஜெயவர்த்தனவும் தொடர்ந்து மூன்றாவது இடத்திலேயே களமிறங்குவார்.'' என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (8)

## உதைபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் டி.ஏ.எம். குணசிங்கம் கலந்துகொள்வார்.

இறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் 'ஏ' அணியை எதிர்த்து யூனியன் 'பி' அணி மோதுகிறது. (8)

# கேணல் ரமணன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக.8

தமிழீழ விளையாட்டுத் துறையினரால் நடத்தப்படுகின்ற கேணல் ரமணன் ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகியது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அணிகளை இணைத்த போட்டியாக இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் தமிழீழ விளையாட்டுத் துறையின் ஊடக இணைப்பாளர் தேவன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை மட்டக்களப்பு வாகரை அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் ஏற்றினார்.

போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்த முல்லைத்தீவு சென்.ஜோன்ஸ் அணியின் வீரர்களையும் கிளிநொச்சி மகாதீபம் அணியின் வீரர்களையும் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நீதா, வாகரை அரசியல்துறைப்பொறுப்பாளர் குயிலின்பன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கனகராசா ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்று போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 29.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தபேந்திரன் 45 ஓட்டங்களையும் சசிதரன் 43 ஓட்டங்களையும் ஜெயராஜ் 24 ஓட்டங்களையும் சயந்தர் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றொசான், அலந்தலா தலா 2 விக்கெட்டுக்களையும் றொகான், சதீஸ் பார்த்தீபன், உமா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிக்குத் துடுப்பெடுத்தாடிய மகாதீபம் அணி 28 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. சதீஸ் 24 ஓட்டங்களையும் றொசான் 14 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

சிறப்பாகப் பந்து வீசிய சென்.ஜோன் அணியின் சசிதரன் 5 விக்கெட்டுக்களையும் தபேந்திரன், முரளி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

இப் போட்டியில் 88 ஓட்டங்களை சென். ஜோன்ஸ் அணி பெற்றது.

(8-307)



கலிபோர்னியாவில் நடைபெற்றுவரும் யு.எஸ்.ஓபன் நீச்சல் சம்பியன் போட்டியில் 200 மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் பிரிவின் புதிய உலக சாதனை படைத்த மகிழ்ச்சியில் அமெரிக்காவின் பிரெண்டன் ஹேன்சன். சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் அவர் 2 நிமிடம் 8.74 வினாடிகளில் இலக்கை எட்டி தனது முன்னையசாதனையை புதுப்பித்துக்கொண்டுள்ளார். 2004 ஆம் ஆண்டு இதே கலிபோர்னியாவில் லாங்பீச்சில் நடைபெற்ற போட்டியில் 2 நிமிடம் 09.04 வினாடிகளில் இலக்கை எட்டியதே அவரது முன் னைய உலகசாதனை .அதே சமயம், இப் போட்டியில் ஹேன்சன் நிகழ்த்தும் இரண்டாவது உலக சாதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 100 மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரேர்க் போட்டியில் 59.13 வினாடிகளில் இலக்கை எட்டி முன்னைய உலக சாதனையை புதுப்பித்துக்கொண்டார் ஹன்ஸன். (8)

விளையாட்டு

### அஸ்ரா கிண்ணத்தொடர்

# யூனியன்- சென்.ஜோன்ஸ் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், ஓக.8

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 'அஸ்ரா' கிண்ணத்திற்கான 17 வயதிற்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யூனியன் கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தினை இடைநிறுத்திக்கொண்டது.

சென்.ஜோன்ஸ் அணியில் கஜரூபன், லாலுஷன், கணபிரசாத் ஆகியோர் முறையே 24, 47, 27 ஆகிய ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரியின் டினேஸ்கரன் மூன்று விக்கெட்டுகளையும் அருள் இரண்டு விக்கெட்டுகளையும் பிரசாந்தன், ஜனகன் ஆகியோர் முறையே தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணியினர் ஏழு விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றனர்.

பிரசாந்தன் 23 ஓட்டங்களையும் தினேஸ்வரன் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

கணேஷவேல் மூன்று விக்கெட்டுகளையும் அச்சுதன் இரண்டு விக்கெட்டுகளையும் ஜெயப்பிரகாஷ், சிவமித்திரன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (8-190)

# புளியங்குளம் இந்துக் கல்லூரி வெற்றி

புளியங்குளம், ஓக.8

புளியங்குளம் இந்துக் கல்லூரி, கல்மடு மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி கடந்த முதலாம் திகதி புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் புளியங்குளம் இந்துக் கல்லூரி இரண்டு விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

முன்னதாக போட்டி ஆரம்ப நிகழ்கள் நடைபெற்றன. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ஞானம், களமுனைப் பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்

ஆரம்ப வைபவங்களை அடுத்து போட்டி ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்மடு ம.வி. அணி 28.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து உதிரிகள் 32 அடங்கலாக 98 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புளியங்குளம் இந்துக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 99 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது. 18.3 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

சிறந்த ஆட்ட நாயகனாக புளியங்குளம் இந்துக் கல்லூரி அணியின் சி.கபிலன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துவீச்சாளராக கல்மடு ம.வி. அணியின் சே.பிரதீபன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத்தடுப்பு வீரராக புளியங்குளம் இந்துக் கல்லூரியின் டே.அமிர்தராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிக்கு 35ஆயிரம் ரூபா பெறுமதியான வெற்றிக்கேடயம் வழங்கப்பட்டது. இரண்டாவது வருடமாக நடைபெற்ற இப் போட்டியில் புளியங்குளம் இந்துக் கல்லூரி அணி இரண்டு முறையும் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. (8-355)

# சாயிசேவா நிறுவன இளைஞர் சபை நடத்திய சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.8

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவன வட பிராந்திய இளைஞர் சபை அண்மையில் நடத்திய சதுரங்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு வைபவம் இம்மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**10 வயதுக்கு கீழ் பிரிவு ஆண்கள்**

அலோசியஸ். ஜஸ்ரைன் (புனித ஜோன் பொஸ்கோ),தருமச்சந்திரன் பிரம்மன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சுகுனதாசன் துளசிகன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), மோகன் ஆகாசன் (யாழ்.மத்திய கல்லூரி)-

**10 வயதுக்கு கீழ் பிரிவு பெண்கள்**

மச்சாஜினி பாலசுப்பிரமணியம் (உடுவில் மகளிர் கல்லூரி), புஸ்கரனி ரவீந்திரன் (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை), சர்வாண்யா செல்வகுமார் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)-

**13 வயதுக்கு கீழ் பிரிவு ஆண்கள்**

சிவகுமாரன் விதுரன் (யாழ்.இந்துக் கல்லூரி), நகுலநாதன் லவலோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), அலோசியஸ் அன்று (யாழ். இந்துக் கல்லூரி), சிவகுமார் மேகலாதன் (யாழ். இந்துக் கல்லூரி), விஜயரட்ணம் விதுசன் (யாழ்.இந்துக் கல்லூரி)-

**13 வயதுக்கு கீழ் பிரிவு பெண்கள்**

பிரியங்கா சுந்தரலிங்கம் (உடுவில் மான்ஸ் ம.வி.), சிவதர்சிகா விக்கினராஜா (வேம்படி மகளிர்), மாதங்கி பாஸ்கரன் (சுண்டுக்குளி மகளிர்)-

**16 வயதுக்கு கீழ் பிரிவு ஆண்கள்**

ஜெயபாலசிங்கம் நிரோஜன் (யாழ். இந்துக் கல்லூரி), [illegible] (யாழ்.இந்துக் கல்லூரி),பாலஸ்கந்தன் பானுஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), செல்வராஜா நிரோசன் (யாழ்.இந்துக் கல்லூரி), வீரையா ஆரூரன் (யாழ்.இந்துக் கல்லூரி), சதீஸ்குமார் சர்மிலன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), பிறைசூடி சுமந்திரன் (மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)-

**16 வயதுக்கு கீழ் பிரிவு பெண்கள்**

கௌசிகா நகுலநாதன் (வேம்படி மகளிர்), ஜெனிற்றா பாலச்சந்திரன் (மகாஜனக் கல்லூரி), தேவப்பிரியா சந்திரசேகரம் (மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), பவீனா விக்கினராஜா (மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), பவதாரணி இராஜரஞ்சன் (அச்சுவேலி மத்திய கல்லூரி)-

**19 வயதுக்கு கீழ் பிரிவு ஆண்கள்**

[illegible] திருவாசகன் (மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்), சிறீகணேஸ் பவகணேஸ் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), கதிர்காமநாதன் சுதர்சன் (மல்லாகம் மகா வித்தியாலயம்), பாலசிங்கம் கீர்த்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)-

**19 வயதுக்கு கீழ் பிரிவு பெண்கள்**

ராதிகாசிவானந்தன் (வைமன் வீதி, நல்லூர்), குயின்சிகா ஜெயராசா (உடுவில் மகளிர் கல்லூரி)-

**19 வயதுக்கு மேல் பிரிவு ஆண்கள்**

சிவஞானசுந்தரம் ஸ்ரீஸ்கந்தா (யாழ். இந்துக் கல்லூரி), நாகராஜா பரமேஸ்வரன் (யாழ்.பல்கலைக் கழகம்), சந்திரகுமார் கமலகாந் (அராலி வீதி, சங்கானை)-

**19 வயதுக்கு மேல் பிரிவு பெண்கள்**

சிவப்பிரியா சிவபாதரத்தினம் (யாழ்.பல்கலைக் கழகம்), ருசாந்தி சீவாஅமிர்தம் (செட்டித்தெரு நல்லூர்), கலைவாணி பஞ்சலிங்கம் (மானிப்பாய் தெற்கு). (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் லட்சார்ச்சனை பூர்த்தி விழா நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அம்பாளுக்கு விசேடஅபிஷேகஆராதனைகள், சங்காபிஷேகம்,சகஸ்ரநாமஅர்ச்சனை என்பன இடம் பெற்று, அம்பாள் திரு வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும். (204)

***

நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய ஆடிவேல் தீர்த்த உற்சவம் நாளை 9ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (100)




அனலையம்பதி நயினாகுளம் கூழாவடியுறை
அருள்மிகு ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தானம்
தேர்த்திருவிழா -2006

இன்று 08.08.2006 செவ்வாய்க்கிழமை - தேர்த்திருவிழா
09.08.2006 புதன்கிழமை - தீர்த்தத் திருவிழா
10.08.2006 வியாழக்கிழமை - பூங்காவனத்திருவிழா

பூங்காவனத் திருவிழா அன்று 1008 கலச சங்காபிசேகமும் நடைபெறும்.
அன்னதான நிகழ்வும் நடைபெறும்.
வடக்கு அம்மன் கோயிலுக்கும் ஊர்காவற்றுறைக்கும் படகுசேவை விசேடமாக நடைபெறும்.

- ஆலய பரிபாலன சபை.

(53035)(32-19-17)


## உள்ளூராட்சி உதவியாளர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.8

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.கிழக்கு புத்தூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட மட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களைக் கலந்துகொள்ளுமாறு உள்ளூராட்சி உதவியாளர் சங்கம் கேட்டுள்ளது. (204)

## சிறுவர்தினப் பேச்சுப்போட்டி முடிவுகள்

வலி.தென்மேற்கு,ஓக.8

சிறுவர் தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பரிசில்கள் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ள சிறுவர் தின விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன என்ற தெரிவிக்கப்பட்டது.

முதலாமிடம் - டாமினி டலஸ் (நவாலி மகாவித்தியாலயம்), இரண்டாமிடம்- தர்மசேகரம் தர்ஷிகா (சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்), மூன்றாமிடம்- வின்சன்ற் தயாளன் ஞானசுகிர்தன் (இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி). (எ-135)


## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி, வீடு விற்பனைக்கு

வத்தளைப் பகுதியில் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் காணிகள், வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:கு.சிறிரங்கன், 0773738775 (53024)

### வீடு, காணி விற்பனைக்கு

மானிப்பாய் கட்டுடையில் ஆறு அறைகளுடன் எல்லா வசதிகளும் கொண்ட வீடும், ஆறுபரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. நேரடித் தொடர்புகளுக்கு கந்தை[illegible]மணன் ஜே.பி., யூ.என்.எச்.சி.ஆர். தண்ணீர் தாங்கிக்கு அருகில் (கட்டுடை) (சண்முகம் கடைக்கு முன்வீடு). (53030)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறாமிலர் குஞ்சுகள் 09.08.2006 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை, தாரகை - பருத்தித்துறை, றாஜ் ஸ்ரோர் - நெல்லியடி, P.ரவி - சாவகச்சேரி, தாசன் பாம் - கோயில் வீதி, நல்லூர், மதுரா - 227, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், நாகம்ஸ் பாம்-வட்டுக்கோட்டை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, றாஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு மற்றும் அனைத்து கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். T.P. 222 2867, 2223529. (51990)

### வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன Self Drive வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி, (பஸ்தியன் சந்திக்கு அருகில்) T.P. 021 - 222 9154, 0777593722 (52249)

## வாழ்த்துகின்றோம்

கடந்த வருடம் (2005) நடைபெற்ற க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் எமது பாடசாலையில் உயர் பேறுகளைப் பெற்ற -

| | |
|---|---|
| 1. செ.செல்வறூபன் | 7A, 2B, 1C |
| 2. சி.அன்பரசி | 6A, 1B, 2C, 1S |
| 3. சி.கார்த்தியாளன் | 4A, 4B, 2C |
| 4. இ.சாருமதி | 4A, 3B, 3C |
| 5. மோ.கஜன் | 5A, 3B, 1C |

ஆகியோர்களையும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்

பழைய மாணவர் சங்கம்,
பழைய மாணவர் சங்கம் (சுவிஸ் கிளை),
அபிவிருத்திச் சங்கம்,
யா/இமையாணன் அ.த.க.பாடசாலை.

(53038)
(32-19-17)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி முத்தம்மா பொன்னம்பலம்

தோற்றம்
12-12-1924

மறைவு
09-07-2006

*31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (08.08.2006) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்திற்குத் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

56, முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (53036)(32-19-17)

-குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர் வி.குணானந்தம்

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இல்லாத காலகட்டத்தில் யாழ்.மருத்துவபீடம் மூடப்படும் அபாய நிலைமையின்போது யாழ். வந்து சேவையாற்றி எங்களுக்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்காய் விளங்கிய எமது மதிப்பிற்குரிய பேராசான் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

[illegible]

(53039)(32-[illegible]


## பொது நிகழ்வுக் காட்சிகள்



தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஐந்து லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கரம்பைக்குறிச்சிக் கிளைக் கட்டடத் திறப்புவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் சங்கத் தலைவர் வே.விநாயகமூர்த்தி, பொது முகாமையாளர் சி.தேவகுமார் மற்றும் சங்க நெறியாளர் குழு உறுப்பினர்கள் காணப்படுகின்றனர்.

*(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)*



வேலணை சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற ஜீவகரன் சுகன்யா என்பவருக்கு வேலணைப் பிரதேச செயலாளர் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் சமுர்த்தி சமாசமுகாமையாளர் எஸ்.கருணாநிதி காணப்படுகின்றார்.

*(படம்: வேலணைச் செய்தியாளர்)*



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டத்தின்கீழ் மாணவன் ஒருவனுக்கு யாழ். மகாராணி புடைவையகத்தின் உரிமையாளர் கே.சோமசேகரம் சைக்கிள் ஒன்றை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*





சுவிஸ் - காரை. அபிவிருத்திச் சபையின் நிதி உதவியுடன் காரைநகர் வைத்தியசாலையில் கட்டப்பட்ட புதிய கட்டடத் தொகுதித் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் கட்டடத் தொகுதியை நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் கட்டடத்தின் ஒரு பகுதியையும் படங்களில் காணலாம்.

*(படம்: காரைநகர் செய்தியாளர்)*



மக்கள் வங்கியின் 45ஆவது நிறைவுநாளை முன்னிட்டு சங்கானை மக்கள் வங்கி ஊழியர்களினால் கணனி பிரதியிடும் சாதனம் ஒன்று சங்கானை வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. இதனை, மக்கள் வங்கி முகாமையாளர் பொன்.அச்சுதம்பிள்ளை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் சுபாசன் ஆகியோரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பொ.சாம்பசிவமும் படத்தில் உள்ளார்.

*(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - லெபனான் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஐ.நா. தீவிரம்

## பலஸ்தீன சபாநாயகர் இஸ்ரேல் இராணுவத்தால் சிறைப்பிடிப்பு

ஐக்கிய நாடுகள், ஒக.8

லெபனான் மீதான இஸ்ரேல் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வர ஐக்கிய நாடுகள் சபை நேற்றுமுன்தினம் முதல் தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது.

இதற்காக பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் குறித்து ஆலோசனை நடந்துவருகிறது. ஐ.நா., முயற்சிகள் ஒரு புறம் இருக்க தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்றும் குண்டுகள் வீசின. மேலும், பலஸ்தீன நாடாளுமன்ற சபாநாயகரையும் இஸ்ரேல் வீரர்கள் சிறைப் பிடித்துள்ளனர்.

பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானத்தை லெபனான் எதிர்த்துள்ளது. போர் விமானங்கள் குண்டுகள் வீசுவதை நிறுத்த வேண்டும் என்று இந்தத் தீர்மானம் வலியுறுத்தினாலும், லெபனானுக்குள் ஊடுருவிய இஸ்ரேல் ராணுவ வீரர்கள் வாபஸ் பெறுவது பற்றி எதையும் கூறவில்லை என்று லெபனான் அரசு அதிருப்தி தெரிவித்துள்ளது.

லெபனானில் ஊடுருவிய இஸ்ரேல் வீரர்கள் வாபஸ் பெற்றால் தான் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியும் என்று ஹிஸ்புல்லா தீவிரவாதிகளும் கூறி வருகின்றனர். ஐ.நா., சார்பில் பாதுகாப்பு படை நிறுவப்பட்டால் தான் லெபனானில் இருந்து வெளியேற முடியும் என்று இஸ்ரேல் கூறி வருகிறது. எனவே, இந்தத் தீர்மானம் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் தெற்கு லெபனானில் உள்ள துறைமுக நகரமான சிடான் அருகில் உள்ள அன்சார் என்ற கிராமத்தின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்றும் குண்டுகளை வீசின. இதில், அப்பாவி மக்கள் எட்டுப் பேர் இறந்தனர். கடந்த மாதம் 12ஆம் திகதி முதல் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதுவரை ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு லெபனான் பகுதியில் வாடி ஹானீன் என்ற எல்லைப் பகுதியில் ஊடுருவ முயன்ற இஸ்ரேல் ராணுவ வீரர் கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக ஹிஸ் புல்லா அமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

லெபனான் மீது தாக்குதல் நடந்துவரும் அதே நேரத்தில் பலஸ்தீனத்தின் மீதும் இஸ்ரேல் தனது பார்வையைத் திருப்பியுள்ளது. பலஸ்தீன நாடாளுமன்ற சபாநாயகர் அப்துல் அசீஸ் டிவாய்க், ரமலா என்ற நகரில் தங்கியுள்ளார். நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டுக்குச் சென்ற இஸ்ரேல் வீரர்கள் அவரை சிறைப்பிடித்துச் சென்று விட்டனர். இதுவரை பலஸ்தீனத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் 60 பேரை இஸ்ரேல் சிறைப்பிடித்துள்ளது.

# லெபனான் - இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்துமாறு பாப்பரசர் வேண்டுகோள்



லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே நிகழ்ந்துவரும் போரை நிறுத்த உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என் பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:-

போர்மூலம் எந்தப் பயனும் ஏற்படாது. போரில் வெற்றிபெற்றவர்களும் எப்பயனையும் அடையப்போவதில்லை. இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் இடையே அமைதிப் பேச்சு நடைபெறவேண்டும். அப்போதுதான் பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலும். அமைதியைத் தான் அனைவரும் வலியுறுத்தி வருகின்றனர். எனவே, மத்திய கிழக்குப் பகுதியில் அமைதி நிலவ வழிவகுக்க வேண்டும் - என்றுள்ளது.

(8)



1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் திகதி ஜப்பானின் ஹிரோஸிமா நகரம் மீது அணுகுண்டு வீசப்பட்டது. இதன்போது உயிரிழந்தவர்களுக்கான நினைவு நிகழ்வொன்று கடந்த 6 ஆம் திகதி அங்கு நடைபெற்றது. அணுகுண்டு வீசப்பட்டதன் ஞாபகமாகக் கட்டப்பட்ட நினைவுத் தூபிக்கு ஜப்பானியப் பிரதமர் கொய்சுமி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதையும் பொது மக்கள் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம். (8)

# சாட் நாட்டுடனான தூதரக உறவை துண்டித்துக் கொண்டது தாய்வான்

தாய்பேய், ஒக.8

சாட் நாட்டுடனான தூதரக உறவைத் தாய்வான் துண்டித்துக் கொள்வதாக தாய்வான் அரசு அறிவித்துள்ளது. மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சாட் நாட்டிற்கு தாய்வான் பிரதமர் சு டிசெங்-சாங் சுற்றுப் பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தார். ஆனால், அவர் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக சாட் உடனான தூதரக உறவைத் துண்டித்துக் கொள்வதாக தாய்வான் அறிவித்தது. தாய்வான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மைக்கல் லூ இதுகுறித்து கூறியதாவது:-

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானிற்கு ஏராளமான நிதி மற்றும் ராணுவ உதவிகளை சீனா வழங்கி வருகிறது. மேலும், சாட்-சூடான் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதாகக் கூறி வருவதோடு, தாய்வான் நாட்டுடனான உறவைத் துண்டித்துக் கொள்ள சூடான் மூலமாக சாட் நாட்டிற்கு நிர்ப்பந்தம் அளித்து வருகிறது. சர்வதேச அளவில் தாய்வானின் அரசியல் நடவடிக்கைகளுக்கு எதிராகச் சீனா இது போன்ற மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. எனவே, சாட் நாட்டுடனான தூதரக அளவிலான உறவை துண்டித்துக் கொள்கிறோம். அந்நாட்டிற்கு செல்லத் திட்டமிட்டிருந்த பயணத்தை தாய்வான் பிரதமர் ரத்துசெய்து விட்டார்.

- இவ்வாறு மைக்கேல் லூ தெரிவித்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பினரை சந்திப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்கிறார் மன்மோகன் சிங்

## வைகோவிடம் அவர் உறுதியளிப்பு



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திப்பது தொடர்பாக அவர்களின் கடிதம் வந்த பின்னர் பரிசீலிப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை பிரதமர் மன்மோகன் சிங் சந்திக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், இலங்கைப் பொலிஸாருக்கு இந்தியாவில் எவ்வித பயிற்சிகளும் வழங்கக் கூடாதென வலியுறுத்துமுகமாகவும் சனிக்கிழமை பிரதமர் மன்மோகன்சிங்குடன் வைகோ தொலைபேசியில் உரையாடிய போதே தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடிதம் வந்தவுடன் இது தொடர்பாக பரிசீலிப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக வைகோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் யுத்தம் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழர் பகுதிகளில் சிங் கள இராணுவமும் விமானப் படையும் பலத்த தாக்குதல் நடத்துகின்றன. எதிர்த்தாக்குதலில் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பதற்றமான சூழலில் இலங்கையின் பொலிஸ் படைக்கு, தமிழ் நாட்டில் கோவையில் மத்திய பாதுகாப்பு படைத்தளத்தில் பயிற்சி கொடுப்பது தமிழர்களின் உள்ளத்தைக் காயப்படுத்தும் செயல் ஆகும். எனவே, அதைத் தடுத்து நிறுத்தி இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று தங்களுக்கு வேண்டுகோள் விடுத்து இருந்தேன்.

என் கவனத்திற்கு வந்து விட்டதாகவும் அது குறித்து கவனிக்கிறேன் என்றும் எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உங்களை சந்தித்தபோது கூறினீர்களாம்.

இலங்கையில் தமிழ் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களைச் சந்திக்க வாய்ப்பு அளிக்குமாறு நான் கடந்த ஜூலை மாதம் 19ஆம் திகதி நேரில் வேண்டிய போது அதை சாதகமாகப் பரிசீலிப்பதாகக் கூறினீர்கள்.

தங்களைச் சந்திப்பதற்கு வாய்ப்புத் தருமாறு கேட்டு, இலங்கையின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடிதம் அனுப்ப இருக்கின்றனர். அவர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தபோது-

இலங்கைப் பொலிஸாருக்கு இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக் கூடாது என விடுத்த கோரிக்கை பற்றி பரிசீலிக் கிறேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்களின் கடிதம் வரட்டும் அதனையும் பரி சீலிக்கிறேன் என்று பிரதமர் கூறினார்-என்று உள்ளது.

(8)

## ஐ.நா., அமெரிக்கா ஆகியவற்றிடம்

# பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான ஆவணங்களை கோருகிறது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், ஒக.8

தடை செய்யப்பட்டுள்ள மதப் பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான ஆவணங்களைத் தருமாறு ஐ.நா. மற்றும் அமெரிக்காவிடம் பாகிஸ்தான் கோரியுள்ளது.

மதப் பயங்கரவாத அமைப்புகள் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் அதற்கான ஆவணங்கள் தேவை. இல்லையெனில் நடவடிக்கை எடுப்பது கடினம் என்று பாகிஸ்தான் அரச அதிகாரி ஒருவர் இஸ்லாமாபாத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தடைசெய்யப்பட்ட மதப் பயங்கரவாத அமைப்புகள் எந்தவிதக் குற்றச் செயல்களிலாவது ஈடுபட்டது தொடர்பான ஆதாரங்கள் இருந்தால் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு சமீபத்தில் வாஷிங்ரனின் நடந்த கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் பாகிஸ்தான் கோரியது.

பாகிஸ்தான் அதிகாரியை மேற்கோள் காட்டி இச் செய்தியை வெளியிட்டுள்ளது 'டெய்லி ரைம்ஸ்' நாளேடு:

தடை உத்தரவுக்கு எதிரான மத பயங்கரவாத அமைப்புகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதால் ஆதாரங்கள் தேவைப்படுகின்றன என்று பாகிஸ்தான் கோரியுள்ளது.

லஷ்கர் இ. தொய்பா, லஷ்கர் - இ.முகமது மற்றும் சில பயங்கரவாத அமைப்புகளை கடந்த 2002 இல் தடை செய்தது பாகிஸ்தான்.

தடை உத்தரவு பிறப்பித்துள்ளதால் புதிய பெயர்களில் இந்த அமைப்புகள் மீண்டும் முளை விட்டதை அடுத்து மீண்டும் அவை 2004 இல் தடைசெய்யப்பட்டது இந்த அமைப்புகளின் தலைவர்கள் சிறிது காலம் சிறை வைக்கப்பட்ட பிறகு விதலை செய்யப்பட்டனர்.(8)

# இறையாண்மைக்கு மதிப்பளியுங்கள்: அமெ.விடம் கியூபா கோரிக்கை

ஹவானா, ஒக.8

கியூபா மக்களுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசா ரைஸ் விடுத்த செய்தியை அந்நாடு நிராகரித்துள்ளது. கியூபாவின் இறையாண்மையை அமெரிக்கா மதிக்கவேண்டும் என்று அந்நாட்டு கலாசார அமைச்சர் ஏபெல் பிரீட்டோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் கியூபா அதிபர் பிடர் காஸ்ரோ அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்காக ஆட்சிப் பொறுப்பை தமது சகோதரரிடம் ஒப்படைத்தார்.

இதையடுத்து கியூபா மக்கள்ஜனநாயகத்துக்காக உழைக்க வேண்டும் என்றும் அதற்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது என்று அமெரிக்க அதிபர் புஷ் கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளார். மேலும் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசா ரைஸ் அமெரிக்க வானொலி மூலம் கியூபா மக்களுக்கு உரையாற்றினார்.

இதற்கு கியூபா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் இச் செயல் கடும் அத்துமீறலாகும். கியூபா தனித்துவமான நாடு. இதன் அரசியல் அமைப்பையும் இறையாண்மையையும் அமெரிக்கா மதித்து செயற்பட வேண்டும் என்று அந்நாட்டு கலாசார அமைச்சர் கூறியுள்ளார்.

(8)

# நீண்டதூரம் பாயும் ஏவுகணையை அப்புறப்படுத்தியது வடகொரியா

ஏவுதளத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நீண்டதூர ஏவுகணை ஒன்றை வடகொரியா அப்புறப்படுத்தியுள்ளதாக தென்கொரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை 5 ஆம் திகதி டேபாடாங் -2 என்ற நீண்ட தூர ஏவுகணையை வடகொரியா விண்ணில் செலுத்திப் பரிசோதித்தது. ஆனால், இச் சோதனைக்கு முன்பாக இரண்டு டேபாடாங்-2 ஏவுகணைகளைக் கிழக்குக் கடற்கரையில் உள்ள முசுடான் - ரி ஏவுதளத்தில் கொண்டு சென்றது வடகொரியா.

ஒன்றை மட்டும்பரிசோதித்துப் பார்த்த நிலையில் எஞ்சிய ஒன்றை ஏவுதளத்திலேயே விட்டு வைத்திருந்தது. இந்த ஏவுகணை அடுத்து எப்போது வேண்டுமானாலும் ஏவப்படலாம் என்ற கருத்து இருந்து வந்தது. இந்த நிலையில் அந்த ஏவுகணையை ஏவு தளத்தில் இருந்து வடகொரியா அப்புறப்படுத்தியுள்ளதாகவும் ஆனால், அது எங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரியவில்லை என்றும் - உளவுத் தகவலின் அடிப்படையில் கூறுவதாக தென்கொரிய அதிகாரி தெரிவித்தார்.

கடந்த ஜூலை 5ஆம் திகதி நீண்ட தூர டேபாடாங்-2 ஏவுகணையோடு குறுகிய தூர ஏவுகணைகளையும் வடகொரியாபரிசோதித்தது. இதற்கு பல நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. ஏவுகணைப் பரிசோதனையை கைவிடுமாறு வடகொரியாவை வலியுறுத்திய ஐ.நா.ஏவுகணை தொடர்பான உடன்பாடு எட்ட பிறநாடுகளுக்குத் தடைவிதித்தது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் போவரை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்பதை முதலாவது படத்திலும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் நோர்வேயின் பிரதிநிதிகளும் பேச்சுகளில் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

# 'காகங்களும் மைனாக்களும்' சிறுகதை தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.8

தமிழ்ச் செய்தி மையத்தின் (ரி.என்.ஐ.) வெளியீடான புயலின் 'காகங்களும் மைனாக்களும்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளம் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலா நிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆசியுரை வழங்குவார்.

(204)

# குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கும்

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

'யுனிசெவ்' நிறுவனத்தினால் தமது திணைக்களத்துக்கு 41 'மேபெல்ட்' ரக மோட்டார்ச்சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன என்றும்-

இவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களே குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படவுள்ளன என்றும்- சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மோட்டார் சைக்கிள்களை வைபவரீதியாகக் கையளிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பண்ணையில் உள்ள சுகாதாரக் கிராமத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யுனிசெவ் நிறுவனத்தின் பிராந்தியப் பொறுப்பாளர் செல்வி யுவிற்புறுனர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பிரபாகரன் எதிர்பார்த்த...

(04ஆம் பக்கத் தொடச்சி)

நடவடிக்கைகளின் மூலமும் நான் பின்லேடன் போன்றதொரு நபரல்ல என்பதை வெளிப்படுத்த முயன்று வந்துள்ளார்.

2001 ஆம் ஆண்டில் தமது மாவீரர்தின உரையின் பின்னர் பிரபாகரன் ஷபாரிப்பாணி உடையணிந்து நடத்திய பத்திரிகையாளர்கள் மாநாட்டின்போது அதில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்களில் பலர் பிரபாகரனின் அந்த ஆண்டு மாவீரர்தின உரையை மனதில் வைத்துக்கொண்டு பிரபாகரனின் கழுத்தில் சயனைற் குப்பி தொங்குகிறதாஎன்பதைக் கண் டறிய முயன்றதில் அவர்களில் பலருக்கு கழுத்து சுளுக்கிக்கொண்டது.

பிரபாகரன் தாம் ஒஸாமா பின்லேடன் போன்ற ஒருவரல்லர், என்பதை நிரூபிப்பதற்காகத் தமது கழுத்தில் தொங்கிய சயனைற் குப்பியைக் கழற்றி எறிந்துவிடவில்லை.

கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த அந்தச் சயனைற் குப்பியை வெளியில் தெரியாத வகையில் மறைத்துக் கொள்ளத் தம்மைப் பழக்கப் படுத்திக்கொண்டார்.

என்றாவது ஒருநாள் தேவைப்பட்டால் அதனை மீண்டும் வெளியே தெரியத்தக்கதாக காட்டிக்கொள்ளலாம் எனக் கருதியே பிரபாகரன் அந்தவேளையில் தமது கழுத்தில் தொங்கிய சயனைற் குப்பியை வெளியில் தெரியாத விதத்தில் மறைத்துக் கொண்டிருக்கலாம்.

தாம் எதிர்பார்த்த அந்த நாள் வரும் வரை பிரபாகரன் நாள்களை எண்ணிக் கணக்கிட்டவாறு காத்திருந்தார்.

உண்மையில் பிரபாகரன் காத்திருந்த அந்தச் சந்தர்ப்பம் கூடிவரும் நேரத்தில் நோர்வே அனுசரணைத் தரப்பின் மூலம் போர்நிறுத்தம் செயலிழந்துவிட்டது என பகிரங்கப்படுத் தச் செய்வதே பிரபாகரனின் திட்டமாக அமைந்திருந் தது.

நோர்வே அனுசரணைத் தரப்பு போர்நிறுத்தம் செயலிழந்துவிட்டது என உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து, தமது கழுத்தில் வெளியில் தெரியாதவகையில் அணிந்திருக்கும் சயனைற் குப்பியை வெளிப்படையாக மற்றவர்களுக்குத் தெரியத்தக்க வகையில் வெளியில் எடுத்து விட்டுக்கொள்ளும் தருணத்துக்காகப் பிரபாகரன் இன்று காத்திருக்கிறார்.

போர்நிறுத்த உடன்பாட்டை மீறி யுத்தத்தைப் பிரபாகரனே ஆரம்பித்தார் என நோர்வே அனுசணைத் தரப்பு தம் மீது குற்றம் சுமத்தி தாம் ஒரு பின்லேடன் என அடையாளப்படுத்தச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடாதென்ற எண்ணம் பிரபாகரனிடம் காணப்படுகிறது.

அரசே மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தது எனக்கூறி அரசு மீது குற்றம் சுமத்த வைத்தோ அல்லது இருதரப்புகள் மீதும் குற்றம் சுமத்திப் போர்நிறுத்த உடன்பாடு செயலற்றுப் போய்விட்டதென நோர்வே அனுசரணைத் தரப்பால் உறுதிப்படுத்தப்படும் ஒரு நிலையை உருவாக்கி விட்டாலோ தாம் ஓர் ஒஸாமா பின்லேடனாக ஆகாது. அரசு மீதான தமது தாக்குதல்களை முன்னெடுக்க முடியும் எனப் பிரபாகரன் எண்ணக்கூடும்.

உண்மையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் தாமாக வெளியேறத் தீர்மானித்துள்ள நிலையில் போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்தானதன் பின் னர் அரச பாதுகாப்புப் படைகள் முதற்றடைவையாக விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஆயுதத் தாக்குதலை மேற்கொள்ளக் களமிறங்கியிருக்கும் இன்றைய நிலைமையொன்றே பிரபாகரன் எதிர்பார்த்துக்காத்திருந்த தருணமாகும்.

அந்தத் தருணம் தற்போது கனிந்துள்ளதென்பது தெளிவாகிறது. தாம் எதிர் பார்த்துக் காத்திருந்த தருணம் தற்போது கனிந்துள்ள நிலையில் பிரபாகரன் தமது இலக்கில் வெற்றி காணும் நிலை உருவாகுமா? அல்லது அரச படைகளின்முன்னால் பின்னடைவு நிலையடைய நேருமா?

அதுகுறித்துத் தற்போது எத்தகைய எதிர்வு கூறலையும் வெளியிடமுடியாதுள்ளது. தற்போது பிரபாகரனுக்குள்ள அவசிய தேவை தாம் ஓர் ஒஸாமா பின்லேடனாக அடையாளப்படுத்தப்படாது, தமது திறமையையும் பலத் தையும் அரச தரப்புக்கு நிரூபிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வதேயாகும். [illegible] குறிப்பிடப்பட்டதை போன்று [illegible] தனை இலேசான தொன்றல்ல.

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் Lion K.சண்முகநாதன்
(ஜெயசஞ்சயன் கட்டட நிறுவனம், ஊரெழு கிழக்கு)
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி அமுதரத்தினம் கனகரத்தினம்

காலமானதையிட்டு எமது ஆழ்ந்த
கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைவர், அங்கத்தவர்,
உரும்பிராய் அரிமாக்கழகம்.

(53043) (24-11-15)

## ஐந்தாம் ஆண்டின் நினைவலைகள்

நிஜம்
01
-
01
-
1935



நிழல்
01
-
08
-
2001

### அமரர் இளையவி மருதலிங்கம்

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மானிலத்தில்"
நீ மாண்டு விட்டாய் நாங்கள் மாளுகின்றோம்.


பிரிவால் துயருறும்:
மனைவி,
மகன்மார்: சந்திரசேகரம், சந்திரகுமார்,
மகள்மார்: சந்திரவதனி, சந்திரகுமாரி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு.
(53044)(32-11-15)

## மரண அறிவித்தல்

### சின்னையா இராசையா

(இளைப்பாறிய தபால் அதிபர்)



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசையா அவர்கள் 07.08.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதிகளின் புதல்வனும் சிவகுரு தம்பதிகளின் மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவர்களான மனோகரன் (முன்னாள் ஆசிரியர்), சியாமளாதேவி (முன்னாள் ஆசிரியை), ரஞ்ஜித்குமார், வரதராஜன், வசந்தகுமார் (பொறியியலாளர்), நந்தகுமார் மற்றும் லலிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரஞ்சினி தேவி (கிராம சேவையாளர், வரணி), கனடாவை வதிவிடமாகக் கொண்டவர்களான ஜெயராஜா (கலைப் படைப்பாளி), லோகராணி, கௌரி, ஜெயமாலினி, வினோஜினி மற்றும் மகேந்திரன் (லிபியா) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா (ஏழாலை), பிள்ளையம்மா (மானிப்பாய்) ஆகியோரின் சகோதரரும் சாமினி (மருத்துவபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்), அனந்தினி, மயூரினி, சங்கீதா, கீதவாணி, சிந்துஜா, சுஜீவன், விதுசிகா, மனுதிசா, யதுர்ஜன், (F)பிரினா, சௌமியா, சரண்யா, தூரிசன், திரிசன், நிதர்சனா, சாகித்தியா ஆகியோரின் பேரனும் (B)பிரிஸ்சா அவர்களின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது நீர்வேலி இல்லத்தில் இன்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சீயாக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.
T.P: 0602213458

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(53042) (24)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சிவப்பிரகாசம்

இணுவில் தெற்கு பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஸ்காபுறோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சிவப்பிரகாசம் (05.08.2006) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் திருமதி க.மயில்வாகனத்தின் அன்புச் சகோதரியும் ஆனந்தசிவம் (இந்தியா), பேரின்பசிவம் (கனடா), திருமதி நிறைமதி கருணாகரன் (கனடா), திருமதி சிவமதி பாலகெங்காதரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2006) புதன்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
T.P.: 021 2222478, 021 2226029

தகவல்:
ம.இராஜநாயகம்
(பாலா - பேறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோ சாரதி கூழாவடியில் ஞாயிறிரவு சுட்டுக்கொலை!

ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் - இராணுவ முகாமுக்குச் சமீபமாக - ஓட்டோ சாரதி ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த மனோகரன் பார்த்தீபன் (வயது 20) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-1-15)


## உளமார வாழ்த்துகின்றோம்



பேரருட்திரு தோமஸ்
சௌந்தரநாயகம் ஆண்டகை
ஆயர் பணியிலும் - அருட்பணியிலும் 25 ஆண்டுகளை நிறைவு செய்யும் எங்கள் பெருமதிப்பிற்கும், வணக்கத்திற்குமுரிய ஆண்டகை அவர்களுக்கு இறையாசீர் வேண்டி இறைபணி தொடர வாழ்த்துகின்றோம்.

தலைவர்/செயலாளர்,
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
கிளிநொச்சி.
(சி/50704)

## உளமார வாழ்த்துகின்றோம்



25ஆவது ஆண்டுகள் நிறைவு செய்யும்
அருட்திரு சி.ஜே.ஜெயக்குமார்
தங்களின் பணிதொடர இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

தலைவர்/ செயலாளர்,
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
(சி/50703) கிளிநொச்சி.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
**அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்**
யாழ்.வண்ணை-கன்னாதிட்டி
## விஸ்வகர்ம உபாகருமம்
நிகழும் வியவ வருடம் ஆடித்திங்கள் 24ஆம் நாள் (09.08.2006) புதன்கிழமை காலை 7 மணிக்கு விஸ்வகர்ம உபாகருமம் நடைபெறும்.

(53102) தேவஸ்தானம்.

உ
சிவமயம்
கண்ணகை அம்மன் துணை
**கோப்பாய் பலானை கண்ணகை அம்மன்**
## தேர்த் திருவிழா விஞ்ஞாபனம் - 2006
கண்ணகை அம்பாள் அடியார்களே!

கண்ணகை அம்பாளிற்கு அடியார்களினால் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பெற்று அப்புதிய சித்திரத்தேரில் இன்று செவ்வாய்க்கிழமை (08.08.2006) காலை 9 மணிக்கு கண்ணகை அம்பாள் ஆரோகணித்து அருள்பாலிப்பார்.

**நிகழ்ச்சி விவரம்**

| | |
|---|---|
| உதய அபிஷேக பூசை ஆரம்பம் | காலை 6 மணி |
| வசந்த மண்டப பூசை | காலை 7 மணி |
| தேர் ஆரோகணம் | காலை 9 மணி |

* கண்ணகை அம்பாள் தேர்த்திருவிழா நேரடி ஒலிபரப்பு சக்தி F.M வானொலியில் இடம் பெறும்.

தேர்த்திருவிழாவிற்கான அருட்பாடல்

**பதினான்கு சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

கோவலன் தன்னை ஆராய் வின்றிக்
கொலையினைப் புரிந்திட்ட செழியன்
கோவில் சென்று வழக்கினை உரைத்த
கண்ணகைத் தாயாள் அவளோ
தீவாம் ஈழம் வடபால் இலங்கும்
யாழெனும் மாவட்ட மண்ணில்
பாவின் மொழியால் புகழ்சேர் பதியாம்
கோப்பாய் ஊரின் நடுவன்
காவின் மலர்சேர் பலானை என்னும்
குறிச்சியின் கூழாவில் தோன்றி
தேவர் போற்றத் தினமும் அருளும்
திருவருட் கோலமும் கொண்டு
மாவின் தேரில் பக்தர்க் கருள
பவனி வருவாள் இன்று
பூவால் தூவித் பாடித் தொழுது
நல்லருள் பெற்றிட வாரீர்.

ஆக்கம்:
வடகோவையூர் திருஞானி

(சி-50702)

பிரசுர அனுசரணையாளர்கள்:

**குகன் பான்சி கவுஸ் அன்ட் கொமினிகேசன்**
பான்சி பொருள்களை மலிவாக பெற்றிடவும் தொலைத்தொடர்பு வசதிகளை துல்லியமாக பெற்றிடவும்.
மானிப்பாய் றோட், கந்தசாமி கோயிலடி
கோப்பாய் வடக்கு.

**ACS கணனி கற்கை நிறுவனம்**
கோப்பாய் பிரதேசத்தில்
அமைதியான சூழலில்
சர்வதேச அங்கீகாரம்
பெற்ற கணனி கல்வியை பெற்றிட
நாடவேண்டிய நிறுவனம்
கோப்பாய் சந்தி, கோப்பாய்.

**துனந்தன் ஸ்ரோஸ்**
மளிகைப் பொருள்களை
மலிவாக பெற்றிட
மானிப்பாய் வீதி,
அரசடி, கோப்பாய்.

**குலம் ஸ்ரோர்ஸ்**
மளிகைப் பொருள்களை
மலிவாக பெற்றிட
மானிப்பாய் வீதி,
கோப்பாய் ம[illegible]

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.
குடும்பத்துடன் பார்த்து மகிழ வேண்டிய படம்
**சூப்பர்மான் ரிட்டேன்ஸ்**
(superman returns)
12.08.2006 சனிக்கிழமை கட்டட நிதியுதவிக்காட்சி
சிவாஜி, பத்மினி நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
**சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்**
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-471 39)

**SUBRA (14)**
சித்தன்கேணி
தரம் 5 புலமைப்பரிசில்
இறுதிக் கருத்தரங்கு- 08.08.2006
மாலை 3.00 - 6.00
ஆசிரியர்: கைலைநாதன்
புதிய பிரிவு - புலமைப்பரிசில்
தரம் 4 மாணவர்களுக்கானது
ஆரம்பம்: 09.08.2006
புதன் - மாலை 3.00 மணி
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை
Spoken English
New Batch
By: **BRITTO**
ஆரம்பம்: புதன் - 4.45 (09.08.06)

**மனோகரா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும்
இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
இன்று முதல் டிஷ்யூம்
புகழ்ஜீவா, கோபிகா,
மோகன்லால்,
பிரகாஷ்ராஜ் மற்றும்
பலர் நடித்த
**அரண்**
10.30, 2.30, 6.30 மணிக்கு

**PHYSICS**
07 - ELECTRICITY
Sat, Sun 9.30, Mon 3.30
08 - MECHANICS
Sat, Sun 10.30
**Mr.R.VARNAN**
CHE- Mr. JEYANTHAN
C.Ma - Mr. JEYAKUMAR
* Gr.1 முதல் O/L வரை
* Gr.6&7 Eng. Med
* Sinhala (Read, Write and Speak)
**SHAMROCK**
Eachchamoddai, Jaffna


# தமிழ் இளைஞர்கள் இருவர் ஏறாவூர் பகுதியில் கடத்தல்

ஏறாவூர் - ஐயங்கேணிப் பிரதேசத்தில் வைத்து நேற்றுக்காலை தமிழ் இளைஞர்கள் இருவர் இனந்தெரியாத ஆயுதக்குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

ஐயங்கேணி, தமிழ்க் கிராமம் - பாடசாலை வீதியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் பாஸ்கரன் (வயது16), ரவிச்சந்திரன் கமல் ராஜ் (வயது - 19) ஆகியோரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேசன் தொழிலாளிகளான இவர்கள் சக தொழிலாளிகளுடன் களுவன்கேணி ஆழிப்பேரலை வீட்டுத்திட்ட வேலைகளுக்குச் சென்றபோது இவர்களை வழிமறித்த இனந்தெரியாத குழுவினர் தமது வாகனத்தில் கடத்திச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (த-157)


## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைச் சேர்ந்த சு.ஸ்ரீகாந் அவர்களின் அன்புத் தாய்
திருமதி
**சுந்தரம் பவளராணி**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு துயருறும் அதே வேளையில் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாவற்காடு,
அச்சுவேலி.
கே.வரதராசன்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமசாமிசெட்டியார் சுப்பம்மாள்



திருமதி இராமசாமிசெட்டியார் சுப்பம்மாள் அவர்கள் (06.08.2006) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராமசாமிசெட்டியாரின் மனைவியும், குருவம்மாள், இரா.செல்வவடிவேல் (விஞ்ஞான ஆசிரியர்), அமரர் பால்ராஜ், செல்வராணி (லண்டன்), வசந்தி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும், அமரர் சாத்தவர்யன், சியாமளா, கதிர்காமநாதன் (லண்டன்), பாலாஜி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும், கனகராஜா (பிரான்ஸ்), மகேஸ்வரி, இராஜசேகரம், அனுஷியா, மகாலட்சுமி, மிருணாளினி, பரமேஸ்வரன், தர்மினி, கணேசவேல், ரிஷிகோபன் (மாணவர்கள்- யாழ். பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

142/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 2228165

தகவல்:
இரா.செல்வவடிவேல்
(மகன் - விஞ்ஞான ஆசிரியர்)
(53050)

## சின்னத்தம்பி சிங்கராஜா



பளை, வீமன்காமம் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிங்கராஜா நேற்று (07.08.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2006) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடை பெற்று தகனக் கிரியைக்காக தாவடி [illegible] மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (53046)

தகவல்:
செல்வி அ.சின்னத்தம்பி
(சகோதரி - வாழ்வகம்)
ந.யோகராசா(பேறாமகன்)

## கனகசபாபதி மனோகரன் (சின்னப்பு)

வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கனகசபாபதி மனோகரன் நேற்று (07.08.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் கோமதியின் அன்புக் கணவரும், சோமபாலன், குமுதினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன் (லண்டன்), மனோகரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுருநாதன் (ஜேர்மனி), அருந்ததி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2006) செவ்வாய்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
ம.கோமதி (மனைவி)

## திருமதி சுந்தரம் பவளராணி (பவளம்)

வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் பவளராணி (பவளம்) நேற்று (07.08.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வல்லிபுரம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஸ்ரீகாந் (கல்வி உத்தியோகத்தர் - பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்), விமலகாந், இமயகாந், ரஜனிகாந் ஆகியோரின் பாசமிகு தாயும் சிவயோகம், காலஞ்சென்ற நடராசா, தங்கராசா, செல்வராசா, சிவராசா, பூபதி, விமலாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலி வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (08.08.2006) செவ்வாய் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வல்லை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
நவயுகன்
(பேறாமகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம்: பிரெஞ்சு நிறுவனம் பணிகளை நிறுத்தியது!

## படுகொலைகளைக் கண்டிக்குமாறு ஐ.நாவிடம் கோரவும் முடிவு

பாரிஸ், ஓக 8

மூதூர் நகரில் அரசு சாராத தொண்டு நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த நான்கு பெண்கள் உட்பட 15 தமிழர்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் குறித்து கடும் அதிர்ச்சி வெளியிட்டிருக்கும் அந்நிறுவனம், இலங்கையில் அதன் பணிகளை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது. அத்துடன், மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்ட பணியாளர்களின் ஒட்டுமொத்தமான படுகொலைகளைக் கண்டிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையைக் கோரவுள்ளதாகவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

பட்டினிக்கு எதிரான நிறுவனம் **(Action Against Hunger)** எனப்படும் இந்த அரசு சாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பினொய்ட் மிரிபெல் பாரிஸில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

11 ஆண்களும், நான்கு பெண்களும் அடங்கிய பணியாளர்கள் - தங்களை அடையாளப்படுத்தும் 'ரீ-சேர்ட்'களை அணிந்திருந்த நிலையில் - அவர்களின் அலுவலகத்தினுள் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

மூதூர் நகரில் இருந்து விடுதலைப் புலிகளின் போராளிகள் வெளியேறிய பின்னர் கடந்த ஞாயிறன்று அந்த நகரினுள் இராணுவம், பிரவேசித்த போது இவர்கள் 15 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

நேற்று படுகொலைகள் நிகழ்ந்த இடத்திற்கு பின்னதாகச் சென்ற ஊழியர்கள் சடலங்களை மீட்டு மாலையில் திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"அந்தப் பகுதியில் என்ன நடந்தது என்பதை அறிவதற்காக ஒரு குழுவை அங்கு அனுப்ப முயன்று வருகின்றோம்" - என்று அதன் பணிப்பாளர் நாயகம் பினொய்ட் மிரிபெல், ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் 250 பணியாளர்கள் இலங்கையில் ஆழிப் பேரலை பாதித்த பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று - பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார்.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் 25 வருட கால தொண்டுப் பணி வரலாற்றில் இது போன்ற ஒரு சம்பவம் முன்னர் நடந்ததேயில்லை என்று மூதூர் படுகொலைகளை வர்ணித்திருக்கிறார் பினொய்ட் மிரிபெல்.

## கண்டி, திகன பகுதியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளான அவரது ஜீப் சாரதியும் சிலமணி நேரங்களின் பின் மரணமானார்.

பொலிஸ் அதிகாரி உபுல் செனிவிரத்னவின் இல்லம் கண்டி ரஜவெலவில் உள்ளது. அங்கிருந்து நேற்று விடிகாலை கடமைக்காக கட்டுக்குருந்த நோக்கிப் புறப்பட்ட சமயமே அவர் பயணம் செய்த 'சி.பி. 8688' என்ற இலக்கமுடைய ஜீப் வண்டி கிளைமோர் தாக்குதலில் சிக்கியது.

சம்பவம் நடந்த சிறிது நேரத்தில் மத்திய பிரதேச பொலிஸ் மா அதிபர் நிமல் மெதிவக்க மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லொக்குகே ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்குப் பொலிஸ் குழு ஒன்றுடன் விரைந்து வந்தனர். அந்தப் பிரதேசம் உடனடியாகப் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

மோப்ப நாய்களுடன் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் அங்கு வந்து சோதனை நடத்தினர். கிளைமோர் வெடித்த இடத்துக்குப் பக்கத்தில் வீதியோர மதகு ஒன்றில் இருந்து மற்றொரு கிளைமோர் கண்ணியும், கைக்குண்டுகள் சிலவும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்றைய கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரி உபுல் செனிவிரத்ன முன்னர் கிழக்கில் விசேட அதிரடிப் படையின் கொமாண்டராகப் பணியாற்றியவர்.

உயிரிழக்கும் சமயத்தில் கட்டுக்குருந்தவில் உள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளராக இருந்தார்.

மத்திய மலைநாட்டின் தலைநகராக விளங்கும் கண்டிப் பிரதேசத்தில் நடத்தப்பட்டிருக்கும் சக்தி வாய்ந்த கிளைமோர் தாக்குதல் பாதுகாப்பு வட்டாரங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது.

இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே நடத்தியிருக்கின்றனர் என்று அரசுத் தரப்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

கண்டியில் விக்ரோறியா அணைக்கட்டை அண்டிய சுற்றுலாப் பயணிகள் மையத்தில் திகன அமைந்துள்ளது.

கண்டி நகரில் 'எசல பெரஹெர' நிகழ்வு நடைபெறுவதால் அங்கு ஏற்கனவே பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்ப்படுத்தப்பட்டிருந்தன. அந்தச் சமயத்திலேயே இந்தக் கண்ணித்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

பயங்கரவாத முறியடிப்பு போர் முறையில் கைதேர்ந்த, விசேட அதிரடிப்படையின் முக்கிய அதிகாரிகளில் ஒருவர் உபுல் செனவிரட்ண.

1997, 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு ஆரையம்பதியில் விசேட அதிரடிப்படையின் பொறுப்பாளராக இவர் இருந்துள்ளார். பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா போன்ற பிரதேசங்களிலும் பின்னர் 2003 முதல் மட்டக்களப்பிலும், விசேட அதிரடிப்படையின் கட்டளையிடும் அதிகாரியாகப் பணியாற்றினார்.

பின்னர் 2004 முதல் கிழக்கு மாகாணம் முழுவதுக்குமான நடவடிக்கைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

சர்வதேச தரத்திலான பயிற்சிகளை விசேட அதிரடிப்படையினருக்கு வழங்குவதில் கைதேர்ந்தவரான உபுல் செனவிரட்ண, கட்டுக்குருந்த பயிற்சிக் கல்லூரியின் பணிப்பாளராக தற்போது பணியாற்றி வந்தார். இவரது கண்காணிப்பின் கீழ் அங்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் சர்வதேச தரம் வாய்ந்தவை என்று இந்திய மற்றும் அமெரிக்க நிபுணர்கள் பாராட்டியிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இதேவேளை -

தாக்குதலில் உயிரிழந்த உபுல் செனவிரட்ண சமாதானத்துக்கு விரோதமான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்தவர் என்று வன்னியில் புலிகள் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முந்திய யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் களத்தில் நேரடியாக நின்று செயற்பட்டு வந்த இவர், பின்னர் யுத்த நிறுத்த காலத்தில் மறைமுகமாக நின்று அதனைக் குழப்புவதற்கான முயற்சிகளில் - குறிப்பாக கிழக்கில் விசேட அதிரடிப்படையினரைப் பயன்படுத்தி - வலிந்து தாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் துணைபோனவர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கிழக்கில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக விசேட அதிரடிப்படையினர் புரிந்த அட்டூழியங்கள், கெடுபிடிகளுக்குத் துணை போனவர் செனவிரட்ண என்றும் அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

(ஐ)

**Uduvil Girls' College**

*invites parents, well wishers and past pupils to its*

**Prize Day 2005**

*on*

*Wednesday August 9, 2006, 9.30 a.m*

*Chief Guest :*

***Ms.Shantha Abimannasingham***

*President's Counsel*

**The Principal, Staff and Students.**

NEW SCIENCE CENTRE

யாழ்.நகர்

PHYSICS

அலகு ரீதியான வினாவிடை

Tue, Thurs 6.30 am

ஆரம்பம் :

10.08.2006

BY: விஜயகுமாரன்

## மாவிலாறில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

122 மி.மீ. ஆட்லறிகளை விடுதலைப் புலிகள் மாவிலாறு பகுதிக்கு நகர்த்தியுள்ளனர் எனக் கிடைத்த தகவலையடுத்து, அந்தப் பகுதியில் புலிகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக அங்கு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின என்று ஒரு தகவல் தெரிவித்தது.

## சூட்டுச் சம்பவத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் ஒப்படைக்கப்பட்டது.

கல்வியங்காடு, வீரபத்திரர் ஒழுங்கையைச் சேர்ந்த சண்முகலிங்கம் றஜீதன் (வயது 21) என்பவரே சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர் என்று கூறப்பட்டது. அவர்களில் ஒருவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இதில் காணாமல் போனவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் நடத்தினார்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு அவர் உத்தரவிட்டார். (ம-1-15-78)

## மாவிலாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்த மூதூர் கிழக்குப் பிரதேசங்களை நோக்கிக் கடும் எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முற்பகல் பயணம் செய்த நோர்வேயின் விசேட தூதர் போவர் பல தரப்பினருடனும் பேச்சுகளை நடத்தியிருந்தார். பிற்பகல் 3.45 மணியளவில் திருகோணமலையில் இருந்து போவர் புறப்பட்டுச் சென்றதையடுத்து அங்கு பாரிய எறிகணைத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று நேற்றுப் பிற்பகல் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## மட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துச் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இயங்கும் துணை இராணுவக் குழுவினரே குறித்த இளைஞரைச் சுட்டுக் கொன்றனர் என்று அங்கு தகவல்கள் வெளியாகின. (க)

## அணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகவே இவர்கள் அங்கு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான இராணுவத் தளபதியைச் சந்தித்து நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடிய பின்னர் அவர்கள் திருமலை நகருக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

பின்னர் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர்களுடன் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட அலுவலகத்தில் இவர்கள் நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந்தச் சந்திப்பில் கண்காணிப்புக்குழுவின் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களின் தலைவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

இதேவேளை, நோர்வேயின் விசேட தூதுவர் மற்றும் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஆகியோரின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன என நேற்று பின்னதாக திருகோணமலையிலிந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## ஊனமுற்றோர் சங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், அருட் தந்தை எஸ்.ஜே. நீக்கிலஸ் அடிகளார், அருட் தந்தை நேசகுமார், அருட் தந்தை எஸ்.சி. ஆனோல்ட், அருட்தந்தை எஸ்.எம். செல்வரட்ணம், ஜும்மா பள்ளி வாசலைச் சேர்ந்த மௌலவிகளான ஏ.ஜி.எம். ஃறான், ஐ.எம்.பாகிர் மற்றும் நாகவிகாரை விகாராதிபதி வண. தேரர் ஆ. ஞானகாந்தனா ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து சமாதானப் பேரணி இடம்பெற்றது. இதில் ஊனமுற்றவர்கள், கல்விமான்கள், அன்னையர்கள், மகளிர் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், மனிதநேய அமைப்புகள், சமய நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கையில் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு பேரணியினர் காங்கேசன்துறை வீதியூடாக யாழ். வைத்தியசாலை வீதியைச் சென்றடைந்து, அங்கிருந்து சிங்கள மகாவித்தியாலய மைதானத்தை அடைந்தனர்.

அங்கிருந்து வாகனங்களில் அவர்கள் யாழ். செயலகத்துக்குச் சென்றனர். அங்கு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸிடம் கையளித்தனர்.

ஐக்கிய நாடுகள்சபை செயலாளருக்கான மகஜர் நல்லூர் கோயில் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் (யு.என்.எச்.சி.ஆர்) அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜர்களின் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நோர்வே அரசு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க)

## இலங்கை அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவிலாறு அணையின் மதகுகளை மூடிய தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் நோர்வேக் குழுவினரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இத்தகவலானது உடனடியாக ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஸ்ரீலங்கா சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹென்ன, நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருக்கு நோர்வே சிறப்பு சமாதானத் தூதுவரால் தெரிவிக்கப்பட்டது.

அதே நாள் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் ஓவே ஜன்சென், திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழுவினர் மாவிலாறு அணைக்கு மதகுகளைத் திறக்கச் சென்றனர்.

அந்த இடத்தை நோக்கி ஸ்ரீலங்கா அரசின் இராணுவம் எறிகணைத் தாக்குதலை நடத்தியது. இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரின் அருகிலும் சில எறிகணைகள் விழுந்து வெடித்துள்ளன. மாவிலாறு மதகுகளைத் திறக்கச் சென்ற இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பதுங்கு குழிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் மாவிலாறு மதகுகளைத் திறக்க முடிவு செய்திருந்த நிலையில் அதே இடத்தில் ஸ்ரீலங்கா அரசு எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் இந்தத் திட்டமிட்ட நடவடிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் கடும் கண்டனம் தெரிவிக்கிறோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ண நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு நிராகரித்தது மட்டுமல்லாமல் நோர்வே அமைதி முயற்சிகளையும் சீர்குலைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான மூதூரில் மக்கள் குடியிருப்புப் பகுதியில் மறு நாள் ஓகஸ்ட் 7 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் ஸ்ரீலங்கா அரசின் இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 15 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கட்டடங்களும், சொத்துகளும் கடும் சேதமடைந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த 40 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கம் எதை வெளிப்படுத்துகிறது? இதுதான் சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்கள் விடுக்கும் வேண்டுகோள். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளின் பின்னால் உள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். - என்று கேட்டுக் கொள்கிறோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org